# இந்திராவின் வங்கி தேச உடைமை செல்லாது


' Regiered as a News Papar in Ceylon விலை சதம் 15 ★ ★

**ஈழநாடு சந்தா**
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 1
தேசிய தினசரி

**ஈழநாடு சந்தா**
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

யாழ்ப்பாணம் தை 29 துல்ஹஜ் 4 புதன்கிழமை [11-2-70]


## இந்திய சுப்ரீம்கோர்ட் பெரும்பான்மைத் தீர்ப்பு

புதுடில்லி, பெப்ரவரி 10

**இந்தியாவிலுள்ள 14 வங்கிகளை பாரத அரசு தேச உடைமையாக்கியதை இந்திய சுப்ரீம் கோர்ட் செல்லுபடியாகாதெனத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது. என்றலும் இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கான ஆட்சிமன்றத்தின் தகுதியை சுப்ரீம் கோர்ட் தனது தீர்ப்பில் மறுக்கவில்லை**



14 வங்கிகள் தேச உடைமையாக்கப்பட்டத்தை ஆட்சேபித்து சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இரு மனுக்கள் மீது இன்று புதுடில்லியில் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கியது.

பதினொரு நீதியரசர்கள் அடங்கிய சுப்ரீம் கோர்ட்டின் விசேஷ சபை இந்த மனுவை விசாரித்தது. பதினொரு நீதியரபர்களில் 10 பேர் வங்கிகள் தேச உடைமைச் சட்டம் செல்லுபடியாகாதென்ற பெரும்பான்மையினர் தீர்ப்பையளித்தனர்

வெளிநாட்டு வங்கிகள் உட்பட வேறு பல வங்கிகள் தேச உடைமையாக்கப்படாத நிலைமையில் 14 வங்கிகள் மாத்திரம் தேச உடைமையாக்கப்பட்டது பாரபட்சமான செயல் என்று கோர்ட் கருதுவதாகத் தீர்ப்பில் கூறப்பட்டது.

நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமான அரசியல் சட்டப் பிரிவை இச்சட்டம் மீறுவதாகவிருக்கின்றது என்று சுப்ரீம் கோர்ட் கருத்து வெளியிட்டது. இச்சட்டம் மக்களின் பொதுவான நன்மைக்கன்றி அரசியல் லாபம் கருதிக்கொண்டு வலுப்பட்டதென்பதற்கு திருப்தியளிக்கும் ஆதாரம் இல்லை என்று கோர்ட் கருதியது.

**14 வங்கிகள்**

50 கோடி ரூபாய்க்குக் குறையாத 'டிபாசிட்' உள்ள 14 வங்கிகளும் கடந்த ஆண்டு ஜூலை மாதம் அவசர சட்டம் ஒன்றின் மூலம் தேச உடைமையாக்கப்பட்டது. சில தினங்களின்பின் இந்த அவசரச்சட்டத்திற்குப் பதிலாகப் புதிய சட்ட நகல் ஒன்று இந்திய ஆட்சி மன்றத்தின் இரு சபைகளிலும் தாக்கல்செய்யப்பட்டது. இச்சட்டம் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் இந்திய ஆட்சிமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது தற்காலிக ஜனதிபதி திரு. இதத்துல்லா ஆகஸ்ட் 9-ம் திகதி இச்சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தார்.

**108 பக்கங்கள்**

இன்றுசுப்ரீம்கோட் தனது தீர்ப்பை 108 பக்கங்களில் வெளியிட்டது. நீதியரசர்களின் பெரும்பான்மையினரின் சார்பில் திரு ஷா தீர்ப்பை வாசித்தார் சட்டத்தை ஆதரித்து நீதியரசர் ஏ.என்.ராய் ஆதரித்தார்.

சுப்ரீம்கோர்ட்டின்பிரதம நீதியரசர் இதயத்துல்லா இவ்விசாரணைசபைக்கு தலைமை வகிக்கவில்லை தாம் தற்காலிக ஜனதிபதியாக இருந்து இச்சட்டத்துக்கு ஒப்புதல் அளித்திருந்ததின் காரணமாகவே விசாரணை சபைக்கு அவர் தலைமை வகிக்கவில்லையென்று கருதப்படுகின்றது.

## சட்டத்தை மாற்றி அமைக்க அரசியல் தலைவர்கள் வற்புறுத்தல்

வங்கிகளை தேச உடைமையாக்கியது செல்லுபடியாகாதென இந்திய சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பு சம்பந்தமாக பல அரசியல் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக தேவையானபடி அரசியல் சட்டம் உடனடியாகத் திருத்தி அமைக்கவேண்டும் என்றும், மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு தி. மு. க. கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி ஆகியோரும் அரசியல் சாசனத்தை உடனடியாக திருத்தி அமைக்கவேண்டும் என தெரிவித்துள்ளனர்.

சட்டம் மாற்றி அமைப்பதற்கு தங்களது ஆதரவு தரப்படும் என்றும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வருத்தத்தைத் தருவதாகவும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

பாரத கம்யூனிஸ்ட்கட்சி தெரிவித்துள்ள கருத்தில், சுப்ரீம் கோர்ட் வழங்கியுள்ள தீர்ப்புநிலைக்குமானல் நஷ்டஈடின்றி எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு மத்திய அரசுக்கோ அல்லது ராஜ்ய அரசுக்கே உள்ள அதிகாரம் அசாத்தியமாகிவிடும் எனக் கூறியுள்ளது.

## வடக்கில் பெரும் மாவுத் தட்டுப்பாடு

# உடனே மாவுக் கப்பல் ஒன்றை வடக்கு நோக்கி அனுப்புக

## அஸ்கிரியதேரோவுக்கு 15நாள் ராஜமரியாதை

கோட்டை, செவ்வாய் நேற்று முன்தினம் காலமான அஸ்கிரியாபீட மகாநாயக்கதேரா வண உடுகம சிறிபுத்தரகித்த இரத்மபால மகாநாயக்காவின் பூதவுடல் 15 நாட்களுக்கு இராஜாங்க மரியாதையுடன் வைக்கப்படும் அவரது இறுதி மரியாதை தினத்தன்று அரை நாள் பொதுவிடுதலை அளிக்கப்படும்.

இந்தத் தகவலை உள்நாட்டமைச்சு இன்று வெளியிட்டது இதுபற்றிய விபரமான அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி பி ஏ)

## உணவுக் கமிஷனருக்கு அவசர கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியில் ஏற்பட்டுள்ள மாவுத்தட்டுப்பாட்டை நீக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளும்படி உணவுக்கமிஷனரை காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. கே.ஜெயபாலசிங்கம் கோரியுள்ளார். இது சம்பந்தமாக மகஜர்ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மாவுத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி கோரி காங்கேசன் து[illegible] சபைத் த[illegible] அவசரத் தந்தியொன்றினையும் உணவுக்கமிஷனருக்கு [illegible]

போதுமான அளவு மாவு கிடைக்காததால் முன்னர் போல் போதியளவு பாண் தயாரிக்கமுடியாதிருக்கின்றனர்.

இதனல் இங்கு ஏற்பட்டுள்ள பெரும் மாவுத் தட்டுப்பாட்டை நீக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேம். மாவுக்கப்பல்ஒன்றை யாழ்ப்பாணம் துறைமுகத்துக்கு அனுப்பிவைப்பதன் மூலம் இப்பிரச்னையை ஓர[illegible] கொள்ளலாம் [illegible] ஒவ்வொரு நாளும் ரயில் மூலம் 500 தொன் [illegible]

## சிவராத்திரி பஜனைவிழா

யாழ்ப்பாணம், புதன் மகாசிவராத்திரியின் போது வண்ணைவைத்தீஸ்வரன் கோவிலில் வடமாநில பஜனைசம்மேளனத்தின் பஜனைவிழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இவ்விழாவில் சகல பஜனைக்குழுவினரையும் கலந்துகொள்ளுமாறு மேற்படி சம்மேளனக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## பிரபல சமூக சேவையாளர் கேட் முதலியார் காலமானார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல சமூக சேவையாளர் கேட் முதலியார் காலமானுர்

யாழ்ப்பாணம், புதன்

பிரபல சமூகசேவையாளரும், பல பொது ஜனஸ்தாபனங்களுடன் தொடர்புடையவருமான கேட்முதலியார் சி. தியாகராஜா கொழும்பில் காலமாகிவிட்டார். உண்மையான சேவை செய்வதையே தனது பணியாகக் கொண்டு வாழ்ந்த கேட் முதலியார் சி. தியாகராசா வடபகுதிக்கு பெருமளவு சேவையாற்றியுள்ளார்.

சமாதான நீதவானுகவும், உத்தியோகப்பற்றற்ற மாஜிஸ்டிரேட்டாகவுமிருந்து சுயநலமற்ற பொதுப் பணியாற்றிய கேட்முதலியார் வடபகுதி சனசமூக நிலைய சமாஜத்தின் தலைவராகவும்பலகாலம்பணியாற்றியுள்ளார். இவரின்சேவையால் வடபகுதி சனசமூக நிலையங்களும் வடபகுதி மக்களும் பெரும் நன்மைபெற்றது குறிப்பிடத்தக்கது.

வடபகுதிக் கயரோக நிவாரண சங்கத்தின் தலைவராக நெடுங்காலம் இருந்த கேட்முதலியார், கிராம சபைத் தலைவராகவும் பல காலம் இருந்துள்ளார். புற்றுநோய் நிவாரண சங்கத்தின் தலைவராகவும், போஷகராகவும் முதலியார் இருந்துள்ளார். கேட்முதலியாரின் பெயரில் மானிப்பாயில் ஒரு வீதியும் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

மானிப்பாயில் வாழ்ந்த இப்பெரியார்சேவை மானிப்பாய்க்கு மட்டுமல்லாது ஈழத்துத் தமிழ்பேசும் மக்க்ள்எல்லாருககும் கிடைத்துள்ளதென்பது குறிப்பிடக் கூடியது

இன்று அவரது ஈமைக்கிரிகைகள் கொழும்பில் நடைபெறுகிறது,

---

விழாவில் சகல பஜனைக்குழுவினரையும் கலந்துகொள்ளுமாறு மேற்படி சம்மேளனக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## ஜப்பானிய கப்பல் மூழ்கியது

டோக்கியோ, பெப். 10

பசிபிக சமுத்திரத்தில் ஜப்பானிய கப்பலொன்று மூழ்கியதில் பலர் பலியாகியிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது இக் கப்பலின் தளபதியும் மாலுமிகளும் உட்பட நால்வரை இன்னும் காணவில்லை மூழ்கிக்கொண்டிருந்த கப்பலிலிருந்து 22 பேரை நியூஸிலாந்து கப்பல் ஒன்று காப்பாற்றியது.

## சங்கானை அல்ல

10-2-70 'ஈழநாடு' இதழில் வெளியான 'பெண்ணைக் கடத்தி தமது மகனுடன் பூட்டிவைத்தாராம்' என்னும் செய்தியில், கடத்தப்பட்ட இளம்பெண் சங்கானை பொம்மைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் வேலைசெய்பவர் என்றிருப்பது தவறு. அது வட்டுக்கோட்டையிலுள்ள பொம்மைகள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலையாகும். இச் சம்பவம் வட்டுக்கோட்டையில் நடந்தது.

---

நக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி கோரி காங்கேசன் துறை பட்டின சபைத் தலைவர் இன்றுகாலை அவசரத் தந்தியொன்றினையும் உணவுக்கமிஷனருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

'அன்றுட வடபகுதி மக்களுக்குத் தேவையான மாவை விநியோகிக்கக்கூடிய நிலையில் வடபகுதி கூட்டுறவுசங்கக்கடைகள், யூனியன்கள் இல்லை. இதனுல் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்' என்று உணவு கமிஷனருக்கு திரு. ஜெயபாலசிங்கம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

அம்மகஜரில்மேலும்குறிம்பிட்டுள்ளதாவது:-

'உள்ளூர் பேக்கரிகளுக்கு அனுப்பிவைப்பதன் மூலம் இப்பிரச்னையை ஓரளவு தீர்த்துக்கொள்ளலாம். அல்லது ஒவ்வொரு நாளும் ரயில் மூலம் 500 தொன் மாவை இங்கு அனுப்பி வைக்கஏற்பாடுசெய்யலாம். இதனுல் பொதுமக்களின் உடனடித்தேவையைத்தீர்த்துக்கொள்ளலாம்.

'அத்துடன் மாவுக்கப்பலை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதன்மூலம் பலஇளைஞர்கள் வேலை பெறுவதற்கு வாய்ப்பும் கிடைக்கும்'

இம்மகஜரின் பிரதிகள் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி, யாழ். உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## திருமலைக்கு பிரேமதாசா விஜயம் செய்வார்

திருக்கோணமலை, செவ்.

திருக்கோணமலைக்கு விரைவில் விஜயஞ்செய்யவிருக்கிறுர், உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசா, அமைச்சரின் திருமலை விஜயத்துக்கு வேண்டிய ஒழுங்குகளைக் கவனித்துவருகின்றுர்கள் உப்புவெளிக் கிராம சபையினர்.

கன்னியா வெந்நீர் ஊற்றுக்கு வந்துபோகும் யாத்திரிகர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்டிருக்கும் யாத்திரிகர் மடத்தைத் திறந்து வைப்பதற்கே அமைச்சர் வரவிருக்கிறுர். அமைச்சர் திருமலை விஜயத்தின்போது உள்ளூராட்சி சம்பந்தமான பல இடங்களுக்குச் செல்லவிருக்கிறுர்.

## கைதான காதலர் தம்பதிகளாகச்சென்றனர்

மாவிட்டபுரம், செவ்

பெற்றேருக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு ஓடிய 19 வயது இளம் பெண்ணையும், அவரது 23 வயதுக் காதலனையும் கிராமசேவையாளர் கைதுசெய்தார். பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட காதல் ஜோடிகள் தம்பதிகளாக வெளியே சென்றனர்.

பலாலி தெற்கைச்சேர்ந்த அருளம்மா தேவசகாயம் என்ற இளம்பெண்ணே கோப்பாயைச் சேர்ந்த ஜோசெப் தாவீது என்ற இளைஞருடன் ஓடிச் சென்றுர்.

இவர்கள் புன்னுலைக்கட்டுவனிலுள்ள வீடொன்றில் ஒளிந்து கொண்டிருக்கையில் பலாலிப்பகுதிகிராம சேவையாளர் திரு. என். கதிரேசு இருவரையும் கைசெய்து சுன்னுகம் பொலிசில் ஒப்படைத்தார்,

மூன்றுவருடகாலமாகத்தாங்கள் காதலர்களாக இருப்பதாகவும், தாம் கணவன் மனைவியாக வாழப் போவதாகவும் பொலிஸில் காதலர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, பொலிசார் இருவரையும் தம்பதிகளாக இணைத்துவைத்து அனுப்பினர்.

கருணுநிதியின்

## ஓராண்டு ஆட்சி

சென்னை, பெப். 10

தமிழ்நாடு முதலமைச்சராகபதவியேற்றுஓராண்டு நிறைவுறுவதையொட்டி திரு. மு. கருணுநிதி விடுத்த செய்தியொன்றில் தமக்கு ஒத்துழைப்பு அளித்தகட்சியினர், பொதுமக்கள், அதிகாரிகள் நண்பர்கள் யாவருக்கும் நன்றி தெரிவித்திருக்கிறுர்.

தமிழ்நாட்டில் வகுப்பு ஒற்றுமை நிலவுவதற்காக ஒத்துழைத்த எல்லா கட்சித்தலைவர்களுக்கும் ஆலோசனைகள் கூறிய அறிஞர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார். தொடர்ந்து ஆட்சியைச்சிறப்புற நடத்த எல்லாரது ஒத்துழைப்பையும் அவர் கோரியிருக்கிறுர்.

---

யானபடி அரசியல் சட்டம் உடனடியாகத் திருத்தி அமைக்கவேண்டும் என்றும், மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு தி. மு. க. தனது பூரண ஆதரவை வழங்கும் என்றும் தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி மத்திய அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு. பிரமானந்த ரெட்டி, திரு. நம்பூதிரிபாத், பிரஜா சோஷலிஸ்ட்

...படும் என்றும், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வருத்தத்தைத் தருவதாகவும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி கூறி...

...சுக்கோ அல்லது ராஜ்ய அரசுக்கே உள்ள அதிகாரம் அர்த்தியமாகிவிடும் எனக் கூறியுள்ளது.

## யு. எஸ். வீரர் 11 பேர் பலி

சைகோன், பெப். 10

ஹெலிக்கொப்டர் ஒன்று மரங்களின்மேல் மோதி நொறுங்கியதில் 11 அமெரிக்க ராணுவத்தினர் மரணமானுர்கள் இதில் சென்ற ஒருவர் மாத்திரம் உயிர்தப்பினுர். இந்த ஹெலிகொப்டர் சுடப்பட்டு வீழ்த்தப்படவில்லையென்றும் யந்திரக் கோளாறின் காரணமாகவே விபத்துக்குள்ளாகியதாகஅதிகாரிகள்கூறினுர்கள். தென்வியட்னுமில் டானுங்விமானநிலையத்துக் கருகில் இந்த விபத்து ஏற்பட்டுது.

## துறைமுகத் தொழிலாளர் வேலைக்குத் திரும்ப முடிவு

கொழும்பு, செவ்.

துறைமுகக் கூட்டுஸ்தாபனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைநிறுத்தம் முடிவடையும் அறிகுறிகள் தென்படுகின்றன. இன்னும் ஓரிரு தினங்களில் வேலைநிறுத்தம் முடிவடையக்கூடும் என தொழிற்சங்கத்தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

இன்று கொழும்பில் வர்த்தக ஊழியர் சங்கமும், தொழிற்சங்க கூட்டு முன்னணியும்வேலைநிறுத்தத்தை நிறுத்துவது சம்பந்தமாக இவ்விரு தொழிற்சங்கங்கள்கூடி ஆராயவிருக்கிறது.

கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு வழங்குவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே வேலைநிறுத்தக்காரர் வேலைக்குதிரும்பமுடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

6000க்கும் அதிகமான ஊழியர்கள் தற்போது வேலைநிறுத்தம் செய்துவருவதாக தொழிற்சங்கங்கள் கூறும் அதே வேளையில் 600க்கும் குறைவானவர்களே வேலையைப் பகிஷ்கரிப்பதாக அரசாங்கம் கூறுகிறது.

கொழும்பு, காலி, திருக்கோணமலை ஆகிய துறைமுகங்களில் நடைபெற்றுவரும் இந்த வேலைநிறுத்தத்தில் துறைமுகவேலைகள் ஸ்தம்பிக்காதவாறு இராணுவ, கடற்படை வீரர்கள் துறைமுகங்களில் சேவைக்கு அமர்த்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

— —

## "யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்"

மாவிட்டபுரம், செவ்

திரு. ந. சிவநேசன் (எம். எஸ். ஸி. பொருளாதாரம்) இம்மாதம் 17ந் திகதி சுன்னுகம் பட்டினசபையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கும் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் 'யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம்' என்னும் விடயமாக ஆய்வுரை வழங்குவார்.

# கிராமசேவகர், மனைவி பிள்ளைகள் முழுகுடும்பம் தற்கொலை

கொழும்பு, செவ்.

கிராமசேவகர் ஒருவரும் அவரது மனைவியும், இரு பெண்பிள்ளைகளும் கிருமிநாசினி அருந்தி மரணமானுர்கள்.

இப்பரிதாப சம்பவம் குருநாகல் மாவட்டத்தில் உள்ள மாவத்தகமவில் நடைபெற்றுள்ளது. இக் கிராமசேவகரால் கிருமி கொடுக்கப்பட்ட அவரது 8 வயதுக் குழந்தை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும், அதன் நிலைமையும் கவலைக்கிடமாகவுள்ளதாகவும் மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி. பி. ஏ)

# மரணதண்டனை 10 வருட கடூழியச் சிறையாக குறைப்பு

## கல்முனை கான்ஸ்டபிள் கொலை வழக்கு அப்பீலில் தீர்ப்பு

கொழும்பு, செவ்வாய்

கல்முனை பொலிஸ் கான்ஸ்டபிள் ஐயாத்துரை கொலைவழக்கு அப்பீல் விசாரணையில் எதிரியான பொலிஸ் கான்ஸ்டபிள் பீற்றர் சிங்கத்தின் மரணதண்டனை மாற்றப்பட்டு 10 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றி வல்வெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை என்பவரைக் கொலை செய்ததாக முன்னர் அசைஸ் நீதிமன்றத்தில் அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் பீற்றர் சிங்கம் அல்லது பேதுருப்பிள்ளை என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இதனை அப்பீல் செய்த எதிரிக்கு உயர் நீதியரசர் திரு பெர்னுண்டோ தலைமையில் விசாரணை செய்த நீதிமன்றம் மரணதண்டனையை மாற்றி 10 வருட கடூழியச் சிறைத் தண்டனையாகக் குறைத்துள்ளது.

கைமோசக்கொலையெனத் தெரிவிக்கப்பட்டு இத தண்டனை குறைக்கப்பட்டது. (சீ. பி. ஏ)

# இந்தியாவில் பட்டம் பெறும் இலங்கை மாணவர்

## இங்கேயே தொழில் பயிற்சி பெறலாம்

மதுரை, பெப். 10

இந்திய பல்கலைக் கழகங்களின் எம். பி. பி. எஸ். (வைத்திய) பட்டப்படிப்பை பெறும் இலங்கை மாணவர்கள் தங்கள் பரீட்சையின் இறுதியில் ஈடுபடும் தொழிற்பயிற்சியைப் பெறுவதற்கு இலங்கைப் பல்கலைக் கழக வைத்திய நிறுவனங்களையும் அங்கீகரிப்பதென்று இலங்கை இந்திய பல்கலைக் கழகச் சபை தீர்மானித்திருக்கின்றது.

சமீபத்தில் நடைபெற்ற மேற்படி சபையின் ஐந்தாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் மகாநாட்டில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இருநாடுகளதும் 49 பல்கலைக் கழக உபவேந்தர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். பல்கலைக் கழகங்களில் கொண்டுவரப்படும் தீர்மானங்களில் மாணவர்களும் பங்குபெறவேண்டும் என்ற மாணவர்களின் பொது கோட்பாடு இச்சபையினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனுல் இத்தீர்மானங்கள் செயற்படுவது பற்றிப் பின்னரே ஆலோசிக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டது.

மேலும் இம்மகாநாட்டில் இரு நாடுகளது பல்கலைக் கழகங்களின் தற்போதைய நிலைமைகளும் பல்கலைக் கழகங்களில் மாணவமன்றங்களின் தேவைபற்றியும் ஆராயப்பட்டது.

## மரண அறிவித்தல்

### சமூக ஜோதி சி. தியாகராஜா, ஜே. பி.

சமூகஜோதி கேட்முதலியார் சிதம்பரப்பிள்ளை தியாகராஜா ஜே. பி. நேற்று இறையடியெய்தி விட்டார். இவர் திருமதி வி. வாமதேவன், தி. ஸ்ரீ ராமநாதன், திருமதி பி. நடேசன் ஆகியோரின் அருமைத் தந்தையாவார். அன்னுரின் பூதவுடல் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு 14, ப்ளவர் தெரு, கொழும்பு 3 என்னும் முகவரியிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கனத்தை பொது மயானத்தில் தகனம்செய்யப்படும். 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடும் வளவும்

(1) யாழ்ப்பாண நகரம், 2 மாடிவீடு, 3 பரப்பு 7 படுக்கையறை, மெயின் வீதி அண்மை, 100,000 — 150,000 (2) பருத்தித்துறை வாடிவீடு ரோட், 2 படுக்கையறை வீடு, 40,000-65,000 (3) நெல்லியடிச் சந்தி, 2 1/2 பரப்பு நிலம். 20,000 - 30,0 0 (4) அல்வாய்- 2 பரப்புக் காணிகள் முத்துமாரியம்மன் கோவில் அப்பால். (5) செங்கலடி-கீழ்மாகாணம் ஒரு ஏக்கர் மெயின் ரோட், வீடுகட்டும் நிலம். உடன்விற்பனைக்குண்டு விண்ணப்பிக்கவும். பிறக்டர் மகேசன், 1-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். பிறக்டர் சிவானந்தன், 282. டாம் வீதி. கொழும்பு-12. 1822

காணி

4 1 2 பரப்பு, சிறியவீடு, கக்கூஸ், கிணற்றுப் பங்கு, பிரதான வீதி, மின்சாரம், பஸ் வசதி, சண்டிலிப்பாய் தெற்கு ஆங்கிலவித்தியாசாலைக்குக்கிட்ட, டிஸ்பென்சரி பக்கத்தில், ரூபா 10,000, டாக்டர் திருவிளங்கம், டெமற்றக்கொட. 1837

### தேவை

பரமானந்த் மில், தாவடி, இயந்திரம் ஓடுவதற்கு ஒருவர் தேவை. வேலை தெரியாதவரானாலும் உடனே தொடர்புகொள்ளவும். சு. இ. ஸ்ரீதரன். ஆனந்தகிரி, தாவடி, கொக்குவில். 1838

## உள்ளூராட்சி வாரம்

சுழிபுரம், செவ்.

வழக்கம்பரை மகாமாரி அம்மன் ஆலயமணி ஒலிக்க சுழிபுரம் கிராமசபை முன்றலிலுள்ளகம்பத்தில்இலங்கை தேசிய கொடியை கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஏற்றிவைத்தார் உள்ளூராட்சி வார சுற்று நிருபம் படங்கள் கிராம சபை அலுவலகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டன. சன சமூக நிலையப்பிரதிநிதிகள், விளையாட்டுப் போதனாசிரியர் கா. அரிச்சந்திரா ஆகியோர் சமய அனுட்டானங்களில்கலந்துகொண்டு வழிபாடுசெய்தனர். சுகாதார விழா, சேரிஒழிப்புத்திட்டம், இலக்கியவிழா ஆகியவற்றை நடாத்தவும், சன சமூகநிலையப் பிரதிநிதிகள் கலந்துரையாடல்ஆகியவற்றை நடாத்தவும், கிராம சபைத் தலை

## மயிலிட்டிக் கிராமசபையின் கேள்வி விளம்பரம்

மயிலிட்டிக் கிராமசபைத் தலைவரால் (மயிலிட்டிக் கிராமசபையின் பலாலி— அச்சுவேலி டச் ரோட் திருத்த வேலைக்கு) 27-2-1970-ந் திகதி காலை 9.30 மணி வரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ரூபா 25/-ம் கேள்விப்பத்திரச் செலவு ரூபா 10/-ம் கட்டிக் கிராமசபைக் கந்தோரில் 25-2 70 நண்பகல் 12 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலை பற்றிய விபரங்களைக் கிராம சபைக் கந்தோரில் வேலை நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

(ஒப்பம்) கு. நி. இராசதுரை
தலைவர்,
கிராமசபை, மயிலிட்டி.

கிராமசபை அலுவலகம்,
மயிலிட்டி, காங்கேசன்துறை
8-2-70. 1947

சங்கானை

## ப. நோ. கூ. சங்க புதிய நிர்வாகிகள்

சங்கானை, செவ்வாய்

சங்கானை கிழக்கு மத்திய ப. நோ. கூ. சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது. முன்னைய தலைவர் திரு. எஸ். சீவரத்தினம் மீண்டும் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவர் திரு. ஏ. ஈ. இரத்தினசாமி காரியதரிசி எஸ். கனகரத்தினம் உபகாரியதரிசி எஸ். சுந்தரமூர்த்தி.

எம். கார்த்திகேசு, எஸ். கே. திருச்சிற்றம்பலம், கே. பொன்னையா, வி. நடராசா, எம். நாகேந்திரம், ஏ. கே. அழகசுந்தரம், கே. பரராசசிங்கம், கே. சிவஞானம், என். செல்லையா, என். பாலன், எஸ். விஜயரத்தினம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## லண்டன் வங்கியில் கொள்ளை

லண்டன், பெப். 10

நீண்டநாட்களுக்கு மீண்டும் லண்டன் வங்கி யொன்றில் பெரும் கொள்ளை யொன்று நடைபெற்றுள்ளது. எட்டுப்பேரடங்கிய கொள்ளைக் கோஷ்டியொன்று லண்டன் வங்கியொன்றுக்குள் நுழைந்து சுமார் 2 லட்சம் பவுண்வரை திருடிக்கொண்டு போய்விட்

# இன்றைய பலன்

தைமாதம் 29-ம் திகதி [11-2-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- மனப்போராட்டம் அதிகரிக்கும் உறவினர் ஒருவரின் ஆத்திரம் பிறக்கலாம். இதன்மூலம் கைகலப்பு ஏற்படலாம். பிள்ளைஒன்றின் உடல்நலமும் பாதிக்கப்படலாம் பொறுமை நன்று.

**ரிஷபம்**- வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும். சுபகருமங்கள் நடைபெறும். சுற்றமும்சூழும்.

**மிதுனம்**- நண்பர்களுடன் கருத்து வேற்றுமை உருவாகும். வியாபாரிகள் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம் பொருட்செலவும் உண்டு.

**கடகம்**- வாகனவிருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும். மோகனவாழ்வு கிட்டும். முன்னேற்ற வழியும் தோன்றும்,

**சிம்மம்**- புதியபாதை வழிதிறக்கும். புத்திரசுகமும் உண்டு. இதயத்தில் இன்பம் பொங்கும். இல்லத்தில் இனிமை தவழும் சுமுகமான நாள்.

**கன்னி**- உறவாடிக் கெடுப்பதற்கும் பகையாளிகள் வருவார். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

**துலாம்**- குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினால் பெருமைக்கும் இடமுண்டு.

**விருச்சிகம்**- வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக் கூடும். சகோதரவழியாலும் சஞ்சலம் உண்டு.

**தனுசு**- மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் சிலருக்கு பதவிஉயர்வுக்கும் இடமுண்டு. முயற்சியால் முன்னேற்றமுண்டு

**மகரம்**- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். தொழில்துறையில் புதிய சாதனை உருவாகும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

**கும்பம்**- இதயத்தில் பூரிப்பு இன்பத்தின் சாயலுடன் இல்லறமும் சிறக்கும். கரும்புபோல் இனிக்கும் காரியங்கள் உண்டு.

**மீனம்**- பொருள்முடை தென்படும். கடன்பட நேரிடும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போகலாம். துக்கமான நாள்.

பாலர் ஞானோதய சபை நடத்திய

# ஆண்டுப் பரீட்சையில் சித்தி எய்தினர்

மாவிட்டபுரம், செவ்.

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 24வது ஆண்டுப்பரீட்சைகள் சமயம் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் ஆகிய நான்குபகுதிகளாக நடாத்தப்பட்டது. இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் விபரம் வருமாறு:

**சமயம்**

முதலாம் வகுப்பு: விசேட சித்தி- வை மதிவேனில், திறமையான சித்தி- மு மஞ்சுளாதேவி, சாதாரணசித்தி- மு சுமதி.

இரண்டாம் வகுப்பு: வனஜா, வை வேனிலான் மு முருகதாஸ். சாதாரண சித்தி- மு கலாதேவி, மு அருள்நந்தி.

நான்காம் வகுப்பு: சாதாரண சித்தி- மு ஞானேந்திரன், ம ஞானகுமாரி, மு உமாதேவி.

ஐந்தாம் வகுப்பு: விசேட சித்தி-ச நளினி, மு சரோஜினி தேவி. திறமையானசித்தி- செ, சரவணபவன், மு முருகதாஸன். சாதாரணசித்தி- இ இரத்தினேஸ்வரன், மு சிவபாஸ்கரமூர்த்தி.

ஆறும்வகுப்பு: திறமை

# இலங்கையிடம் சுவிட்ஸர்லாந்து தோல்வி

## சுகததாசா ஸ்ரேடியத்தில் நடந்த விறுவிறுப்பான உதைபந்தாட்டம்

கோட்டை, செவ்.

சுவிட்சர்லாந்து விளையாட்டுக் கழகத்துக்கும், இலங்கை உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில், சுகததாச விளையாட்டரங்கில் 'மின்னொளி'யில் நடைபெற்ற போட்டியில் இலங்கைக் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகும் போது கடும் குளிருடன் சேர்ந்து இலேசாக மழை தூறியவண்ணமே இருந்தது. இதனால் குளிர்ந்த சீதோஷ்ண நிலையில் விளையாடிப் பழக்கப்பட்ட சுவிச்சலாந்து வீரர்களுக்கு இக்காலநிலை சாதகமாகவே இருந்தது.

ஆட்டம் தொடங்கி முடிவடையும்வரை சுவிட்சர்லாந்து வீரர்கள் மிகச்சிறப்பாக விளையாடி மைதானத்தை சுற்றியிருந்த பல்லாயிரக் கணக்கான ரசிகர்களை மகிழ்வித்த வண்ணமே இருந்தனர். இலங்கை கோஷ்டி வீரர்களும் எதிர்க் கோஷ்டியினரின் வேகமான முன்னேற்றத்தை மிகசாதுரியமாக முறியடித்தவண்ணமே இருந்தனர் இடைவேளைவரை இரு கோஷ்டியினரும் கோல்கள் எதுவும் போடவில்லை.

இடைவேளையின் பின்ஆட்டம் ஆரம்பமாகிய போது இலங்கை கோஷ்டி வீரர்கள் மிக உற்சாகத்துடன் விளையாடிக் கொண்டு எதிர்க் கோஷ்டியின் கோல்வாயிலை நோக்கி பலமுறை முன்னேறினர். சுவிட்சர்லாந்து வீரர் ஆட்டத்தை திறம்பட ஆடுவதில் முக்கிய கவனம் செலுத்தி வந்தார்கள். அதே வேளையில் எமது இலங்கை கோஷ்டி வீரர்கள் கோல்களைப் புகுத்துவதிலேயே அதிக கவனம் செலுத்தியதினால் இக்கோஷ்டியின் முன்னணி வீரர் அமிடோன் முதலாவது கோலைப் போட்டார். இதன்பின் ஆட்டம் மிக ரசிப்பாகக் காணப்பட்டது. இரு கோஷ்டியினரும் மிகவும் பலமாக மோதினர். முதலாவது கோலைப் போட்ட பத்து நிமிடங்களின் பின் இலங்கைக் கோஷ்டியின் வீரர் நலின் பெரேரா இரண்டாவது கோலைப் போட்டார். சுவிச்சலாந்து வீரர்களின் பல மின்னல் தாக்குதல்களை இலங்கை கோஷ்டியின் கோல்காப்பு வீரர் பியதாச பெரேரா பலமுறை முறியடித்து ரசிகர்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றார்.

ஆட்டமுடிவில் இலங்கைக் கோஷ்டி 2—0 கோல்களால் எதிர்க் கோஷ்டியை வெற்றி பெற்றது.

சுவிச்சலாந்து கோஷ்டி ஆசியாவில் பல தேசியக் கோஷ்டிகளை வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

(தே. நி.)

# செய்திச் சுருக்கம்

### வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது

கடந்த நான்கு மாதங்களாக வேலைவாய்ப்பற்றிருந்த துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபன நிலக்கரி இறக்குமதி ஊழியர்களுக்கு மீண்டும் அதே துறையில் வேலை கிடைத்துள்ளது நான்கு மாத இடைவெளியின் பின் 5,5000 தொன் நிலக்கரியோடு 'எஸ் எஸ். மலேசியா நாகு' என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்தை கடந்த வெள்ளிக்கிழமை வந்து அடைந்ததாதாலேயே இவ்வூழியர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

0 0 0

### கல்வி அமைச்சு கவனிக்கவேண்டியது

'இந்த நாட்டில் 1300 க்கு மேற்பட்ட மகாவித்தியாலயங்கள் இருந்த பொழுதிலும் அவற்றில் விஞ்ஞான கணித பாடவகுப்புகற் கொண்டதாக வசதிகள் செய்யப்பட்டுள்ளவை 300 மட்டுமே உள்ளன அவ்வாறிருந்தும் கலைப்பாடம் கற்கும் மாணவர்களுக்கும் உரிய வசதிகள் இல்லாமல் இருக்கின்றன 1965ம் ஆண்டிற்கு முன்பாவது கலைப் பட்டதாரிகளுக்கு உத்தியோகங்கள் கிடைத்தன இன்று அதுவும் இல்லை' என பேராதனைப் பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் திரு ஜெயசூரியா தெரிவித்தார்.

கள் வேலை நிறுத்தம் செய்யலாமென எதிர்பாக்கப்படுகிறது.

இவர்களுடைய பிரச்னை சம்பந்தமாக சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல் செனநாயக்காவுடன் நடத்திய பேச்சுக்கள் வெற்றி அளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

0 0 0

### திறப்புவிழா

இலங்கையெங்கும்அமைக்கப்பட்டுள்ள 9 தையல் பயிற்சி நிலையங்களில் ஒன்று வாழைச்சேனையில் நிறுவப்பட்டுள்ளது. இதனை தொழிலமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது நேற்றுத்திறந்து வைத்தர்.

0 0 0

### அரசாங்க ஊழியர் பயிற்சிக்கழகம்

மேலதிக கல்வி பெறுவதற்காக சம்பளமின்றி வெளிநாடு செல்லும் அரசாங்க ஊழியர்கள் தங்கள் பயிற்சிக்காலத்தை ஒரு வருட காலத்துக்கு மேல் நீடிக்கக்கூடாது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது. பயிற்சிக் காலத்தை நீடிகக விரும்புவோர் தாம் கடமையாற்றும் திணைக்களங்களின் தலைவர்களிடம் விசேஷ அனுமதி பெறவேண்டும்.

0 0 0

### செயற்கைக்கோள் தொலைபேசி நிலையம்

இலங்கையில் சுமார் 2 கோடி 60 லட்சம் ரூபா

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 11—2—70

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45,

## புதிய நிர்வாகிகள்

திருக்கோணமலை, செவ்.

திருமலைமேன்காமம்இந்து பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ந. இளையதம்பி, உபதலைவர்: எஸ். விக்கிரமசிங்கம், செயலாளர்: பொன். கிருப்ராஜா, பொருளாளர்: எஸ்மயில்வாகனம்.

## புதிய வழக்கறிஞர்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் தெற்கு, சோளங்கனையைச் சேர்ந்த திரு ஆ. வ. க. நீலகண்டன் சட்டக்கல்லூரியிலிருந்து வழக்கறிஞராகச் சித்தி பெற்று வெளியேறியுள்ளார். மலாயன் பென்சனியர் திரு ஆ வ கந்தையா, காலஞ்சென்ற திருமதி கந்தையா ஆகியோரின் புதல்வரான இவர் 8ம் திகதி உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிப் பழைய மாணவரான இவர் உடுப்பிட்டித் தமிழ் மன்றத்தின் ஸ்தாபகரும், சட்டக்கல்லூரி இந்துமகா சபைத் தலைவரும், தென் கருணை இந்து வாலிபர் சங்கத் தலைவரும் ஆவார்.

எழுத்தாளரும் சிறந்த பேச்சாளருமான திரு. நீலகண்டன் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் பலவற்றில் முதல் பரிசுகளைத் தட்டிக் கொண்டுள்ளார்.

## "பிரதிநிதித்துவம் வேண்டும்"

உடுப்பிட்டி. செவ்வாய்

உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் துன்னாலை ஜனசக்தி ஐக்கிய வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. ஆ. குலேந்திரம் மகஜர் ஒன்றைச் சமர்பித்துள்ளார்.

அம் மகஜரில் "துன்னாலைப் பகுதியில் சாதிப்பாகுபாடு மிக மோசமான முறையில் அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இங்குள்ள பொதுச்சங்கங்களில் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் சங்கம் வகிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

உள்ளூராட்சி மன்றங்களிலும் எமது சமூக மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கமுடியாத நிலை உள்ளது. வட்டாரங்களைத் தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய முறையில் பிரித்துத்தர வேண்டும்

இங்குள்ளோரில் 80 வீத

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலக்கியவிழா ஆகியவற்றை நடாத்தவும், சன சமூகநிலையப் பிரதிநிதிகள் கலந்துரையாடல்ஆகியவற்றை நடாத்தவும், கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஏற்பாடுகள் செய்துள்ளார்.

...ன்று லண்டன் வங்கியொன்றுக்குள் நுழைந்து சுமார் 2 லட்சம் பவுண்வரை திருடிக்கொணடு போய்விட்டதாகக்கூறப்படுகின்றது.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த

# அடிமைப் பெண்

ீன்று மட்டும்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
★ சத்தியன் ★ ஷீலா
நடித்த
ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்

# செம்மீன்

(மலையாளம்)

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நாளை முதல்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
தமிழ்நாட்டில் மக்கள் மத்தியில் புதிய சாதனையை ஏற்படுத்திய மாபெரும் வண்ணத்திரை ஓவியம்.
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்று
''பேசும்படத்தின்'' மூன்று விருதுகள் பெற்ற வெற்றிச்சித்திரம்
(1 சிறந்த படம் (2) சிறந்த நடிகர் (சிவாஜி) (3) சிறந்த உபநடிகர் (பாலையா)
நாதஸ்வர இசை:
மதுரை சேதுராமன் - பொன்னுச்சாமி சகோதரர்கள்

# சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
# தில்லானா மோகனாம்பாள்
ஈஸ்ட்மென் கலர்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P. நாகராஜன்


...சித்தி- வை மதிவேனில், திறமையானசித்தி- மு மஞ்சுளாதேவி, சாதாரணசித்தி- மு சுமதி.

இரண்டாம்வகுப்பு: விசேடசித்தி- க ரதிகலா, திறமையானசித்தி- த நளாயினி, இ பவானி, மு அனுஷாதேவி.

மூன்றும் வகுப்பு: விசேட சித்தி- இ ஜெகதீஸ்வரன், திறமையானசித்தி- வா அகிலன, இ பவானந்தன், ந


இன்று மட்டும்
ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா2-30 மணி
எம். ஜி. ஆர்.
நடித்த
குடும்பத் தலைவன்
நாளை முதல்
ஏழைப்பங்காளன்

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி - ஜெமினி- சாவித்திரி
நடித்த
பெண்ணின் பெருமை

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
எம்.ஆர். ராதா — அசோகன்
நடித்த
கண்ணாடி மாளிகை
4-00 p.m. Only
HELICOPTER SPIES

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
ஞாயிற்றுக்கிழமை
காலை 10-30 மெற்னி
தேவ் ஆனந்த் - நந்தா
நடித்த
'டீன் டெவியன்'
[சிறந்தஹிந்திச்சித்திரம்]

Now Showing (2days only)
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Kerwin Mathews
THE VISCOUNT
(color/scope)

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre Poya 4 Shows
Jim Brown, Diahann Carroll
in
THE SPLIT
(adults only)


...தாஸன். சாதாரணசித்தி- இ இரத்தினேஸ்வரன், மு சிவபாஸ்கரமூர்த்தி.

ஆறும்வகுப்பு: திறமையானசித்தி-ந அனுஷா, சாதாரணசித்தி- சொ சிவனேஸ்வரி, வா சயந்தன். நா சிவசங்கரன், ம ஞானகுமார் சோ திருக்குமார்.

ஏழாம் வகுப்பு: திறமையானசித்தி- சொ கணேஸ்வரி, சாதாரணசித்தி: ச சபேசன், த சிவகுமாரன், செ ஸ்ரீதரன்.

எட்டாம் வகுப்பு: திறமையானசித்தி-நா சிவகுமாரன், சாதாரண சித்தி- ச சிவசுப்பிரமணியம். சோ கார்த்திகைகுமாரன்.

ஒன்பதாம் வகுப்பு: சாதாரணசித்தி- சொ கணேஸ்வரன்.

**வாய்ப்பாட்டு**

ஆரம்பபிரிவு: ரி. சூரியகுமார்(திறமை), வ சாவாம்பிகை (திறமை), கு நளாயினி [சாதாரணம்], என் மணிமேகலாதேவி [சாதாரணம்]ரி கலாரஞ்சினி[சாதாரணம்].

கீழ்ப்பிரிவு: சொ கணேஸ்வரி[விசேடம்], என் நந்தகுமாரி [திறமை].

மத்தியபிரிவு பி: பொ சகுந்தலாதேவி (விசேடம்) ச ராகினி (திறமை), பொ இராசலட்சுமி(சாதாரணம்) சு மகாதேவி (சாதாரணம்).

மத்தியபிரிவு ஏ; சி ஸ்ரீமதி (திறமை), இ சரோஜினி தேவி (திறமை), சு.வரதராஜன் (சாதாரணம்).

**வயலின்**

ஆரம்பபிரிவு-எஸ்: ஸ்ரீமதி (சாதாரணம்), ஆர் சரோஜினிதேவி (சாதாரணம்(, சி சிவதேவிஇன்பமலர்(சாதாரணம்), என் மணிமேகலா தேவி (சாதாரணம்).

**மிருதங்கம்**

ஆரம்பபிரிவு- ச சபேசன் (திறமை), சொ கணேஸ்வரன் (சாதாரணம்).

கீழ்ப்பிரிவு- வி ஜெம்புநாதன்(விசேடம்).

மத்தியபிரிவு பி: த. சிவகுமாரன் (திறமை), சோ கார்த்திகைகுமாரன் (திறமை).

மத்தியபிரிவு-ஏ: சு வரதராஜன் (திறமை), மா முருகையா (திறமை), மா சிவகுகன்(திறமை, ச சிவசுப்பிரமணியம் (சாதாரணம்)

## ஆலயத்துக்கு மின்னொளி

சுழிபுரம், செவ்வாய்

மூளாய் முருகமூர்த்தி கோவிலுக்கு மீன்வெளிச்சம் ஏற்றிவைக்கப்பட்டது. திரு. க. ?பரம்பலம் மின்பொத்தானை அமுக்கி வெளிச்சத்தைஏற்றிவைத்தார்.

**புதன் 11—2—70**

செய்திகள்: காலை 6-45, 8-00, 8-30.

பகல் 12-00, 12-45, 1-30.

மாலை 4-25, 5-00, 6-00

இரவு 7-00, 8-00, 9-00, 10-30.

திரைகானம்: காலை: 7-45 பகல்12-03, 1-00.

இரவு 7-15 ஜலதரங்கம், 7-45 நேயர்கடிதங்கள், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு. 9-40 நாதஸ்வரம்.

...இன்று அதுவும் இல்லை' என பேராதனைப் பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியர் திரு ஜெயசூரியா தெரிவித்தார்.

0 0 0

## தாதிகள் வேலைநிறுத்த முயற்சி

125 பல்சிகிச்சைநிலையங்களைக்கொண்ட 225 தாதிமார்கள் தங்களுடைய நியமனங்களை அங்கீகரிப்பதற்குத் திறைசேரி தாமதம் செய்துவருவதையிட்டுஇவர்

# ''தேவார திருவாசகங்களை இளமையில் ஓத வேண்டும்''

மாவிட்டபுரம், செவ்வாய்

''மாணவர்கள் இளமையிலே தேவார திருவாசகங்களை இயன்றளவு மனனஞ்செய்து ஓத வேண்டும். பின் அறிவு நிரப்பியதும் பொருளுணர்ந்து ஓத வேண்டும், அங்ஙனம் பக்தியுடனும் மனஉறுதியுடனும் ஓதுவோமானல் நமக்கு வேண்டிய பலன்கள்யாவும் நிச்சயம் கிட்டும்''.

இவ்வாறு சைவப் பெரியார் திரு. செ. சின்னத்துரை தெல்லிப்பளை-பாலர்ஞானோதய சபையின் 24-வது ஆண்டுவிழாவிற்குத்தலைமை தாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பளை காசி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடந்த இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

''இவற்றைப் பாடிய நாயன்மார்களே இதனை அறிதியிட்டுக் கூறியுள்ளார்கள். இளமையில் மாணவர்கள் இவற்றைக் கற்பது மிகவும் இலகுவான காரியம், இளமையிற் கல்வி சிலையில் எழுத்துப் போல் என்றும் அழியாது நிலைபெற்று நிற்கும்' என்ருர்

மாணவ மாணவிகளது இன்னிசைக் கச்சேரிகள், மிருதங்கக்கச்சேரிகள், தேவாரப்பாடல்கள், உபந்நியாசங்கள் என்பன விழாவின் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெற்றன. வருடாந்தப் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களுக்குப் பரிசில்களும் வடஇலங்கைச் சங்கீதப் பரீட்சைகளில் சித்திபெற்றோர்களுக்கு சான்றிதழ்களும் தலைவரால் வழங்கப்பட்டன.

## செயற்கைக்கோள் தொலைபேசி நிலையம்

இலங்கையில் சுமார் 2 கோடி 60 லட்சம் ரூபா செலவில் செயற்கைக்கோள் தொலைபேசி நிலையம் ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது. இது சம்பந்தமான நடவடிக்கைகளை தாமதிக்காது உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் நாட்டின் வெளிநாட்டுத் தொலைபேசிச் சேவைகள் துண்டிக்கப்படும், இவ்வாறு தபால் அமைச்சர் திருமொண்டேகு ஜயவிக்கிரமமந்திரிசபைக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் எச்சரித்துள்ளார்.

0 0 0

## கிருமிநாசினி பற்றிய ஆராய்ச்சி

கிருமிநாசினிகளை பாவிக்கும் முறைபற்றி ஆராய்ந்து அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க உலக சுகாதார ஸ்தாபன பிரதிநிதி டாக்டர் ஆன் இப்போது கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்து வருகின்ருர். பயிர்களின் நோய்களை அழிப்பதற்காக பாவிக்கப்படும்கிருமிநாசினிகளால் இங்கு தற்கொலைகள் அதிகரிப்பதன் காரணம் பற்றியும் சுகாதரத்துக்கு பங்கம் ஏற்படுவதுபற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் யுனெஸ்கோ உலக சுகாதார ஸ்தாபனம் டாக்டர் ஆனிடம் பணித்துள்ளது.

...சமூக மக்கள் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய முறையில் பிரித்துத்தர வேண்டும்

இங்குள்ளோரில் 80 வீதத்திற்கு அதிகமானோர் நிலமற்றவர்கள். இவர்களுக்குக குடியிருக்க நிலம் வழங்க வேண்டும். வீடமைப்புத் திட்டம் மூலம் நிலமற்ருேர் பிரச்சினையைப் போக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

## 6வது தெங்கு கொள்வனவு நிலையம்

தெங்குப் பொருள்கள் உற்பத்தியாகும் இடங்களில் மேலும் பல கொள்வனவு நிலையங்களை அமைக்க கொள்வனவு இலாகா உத்தேசித்துள்ளது. இந்தவகையில் டெடிகம தொகுதியில் ஒபாத்த என்னுமிடத்தில் ஆருவதுநிலையம் இவ்வாரத்தில் திறக்கப்படவிருக்கின்றது.

## மூதூர்ப் பகுதிக் குழப்பநிலை

முன்னர் மூதூர்ப்பகுதி ஒரே காரியாதிகாரி பிரிவாக விளங்கியது. இப்பொழுது சிங்களப் பகுதிகளை உள்ளடக்கி சேருவாவில் என்ற புதிய காரியாதிகாரி பிரிவும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. தமிழர் வாழும் ஈச்சிலம்பத்தையும் சேருவாவில் என்ற சிங்களக் காரியாதிகாரி பிரிவுடன் சேர்ந்திருப்பது மக்களிடம் பெரும் தகராறை ஏற்படுத்தியுள்ளது.


'ஈழநாடு' காரியாலயத்தில்

# விற்பனைக்குள்ள புத்தகங்கள்

| | புத்தகங்கள் [ஆங்கில மொழியில்] | ஆக்கியோன் | விலை |
|---|---|---|---|
| 1. | முதலாவது உலக தமிழ் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதிகள் I & II — | மகாநாட்டில் கலந்துகொண்ட புகழ்பெற்ற பேர் அறிஞர்கள் | ரூபா 250/- |
| 2. | தற்கால தமிழ் இலக்கியத்தில் பெண் — | ஸ்ரீமதி லோகநாயகி நன்னித்தம்பி | ரூபா 12/- |
| 3. | மகாபலிபுரம் பற்றி விளக்கப்படங்களோடு கூடிய நூற்பட்டியல் — | William Willetts | ரூபா 5/- |
| 4. | திராவிடமொழிகள் பற்றிய விபரங்கள்அடங்கிய நூற்படடியல் — | M. Andronov | ரூபா 5/- |
| 5. | தூரதேசங்களில் தமிழ் படிப்பு — | | ரூபா 15/- |
| | ,, ,, ,, — | (கலிகோ பைன்டிங்) | ரூபா 21/- |
| 6. | மகாத்மாகாந்தி வெள்ளேடு(Album படங்களுடன்) — | ராஜேந்திரபிரசாத் முன்னுரையுடன் | ரூபா 10/- |
| 7. | மகாத்மா காந்தியின் செய்திகள் — | மோகன்ராவ் | ரூபா 1/50 |
| 8. | சிறுவர்கள் ராமாயணம் — | M பூதலிங்கம் | ரூபா 2/- |
| 9. | காந்தி கதை (வண்ணப்படங்களுடன்) — | | ரூபா 2/50 |

கையிருப்பில் சொற்ப பிரதிகளே உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்குள் அரபு கொமாண்டோக்கள் வெகுதூரம் ஊடுருவித் தாக்கினர்

## 1967 யுத்தத்தின் பின் முதல் சம்பவம்

**ஜெருஸலம், பெப். 10**

**1967-ம் ஆண்டு அரபு இஸ்ரேல் யுத்தத்திற்குப் பின்னர் ஐக்கிய அரபுக் குடியரசு கொமாண்டோ அணி ஒன்று இஸ்ரேலியர் ஆக்கிரமித்துள்ள பகுதியில் வெகுதூரம் வரை ஊடுருவிச்சென்று தாக்குதல்களை நடத்தியுள்ளது.**

இத்தாக்குதல் சம்பவத்தை ஜெருசலத்தில் அதிகாரி ஒருவர் ஊர்ஜிதம்செய்தார்.

அரபு கொமாண்டோ (அதிரடிப்படை) அணியொன்று இஸ்ரேலியர் சினாய்ப் பகுதியில் கைப்பற்றிவைத்துள்ள பிரதேசத்தில் வெகு தூரம்வரை ஊடுருவிச் சென்று தாக்குதல்களில் இறங்கினார்களாம். சூயஸ்கால்வாய்க்குச் சுமார் 30 மைல் கிழக்கே இத்தாக்குதல் இடம்பெற்றதாம். இவர்களில் ஒருவரை இஸ்ரேலியர் கொன்றதாகவும் மூவரை சிறைப்பிடித்ததாகவும் அறிவித்தனர். ஆனால் மற்றவர்கள் திரும்பிச்சென்றனரா என்பது பற்றி ஒன்றும் கூறப்படவில்லை.

இஸ்ரேலிய நிலைகள் மீது நேற்று எகிப்திய விமானப்படை நடத்திய தாக்குதல்களிலும் இஸ்ரேரேலியருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று கருதப்படுகின்றது.

இருதரப்பு விமானப்படைகளுமே நேற்றுப் பலமுறை மோதிக்கொண்டன. இரண்டு அரபு விமானங்களைச் சுட்டுத் தரையிறக்கியதாகவும் தங்கள் தரப்பில் ஒரு விமானம் சேதமுற்றதாகவும் இஸ்ரேலியர் கூறினார்கள். ஆனால் எகிப்தியர் இதை மறுத்தனர். இஸ்ரேலியரின் இரு விமானங்கள் சுட்டுத்தள்ளப்பட்டதாக அரபுத் தரப்பில் கூறப்பட்டது. இச்சண்டையில் சுமார் 40 விமானங்கள் பங்கெடுத்துக்கொண்டன.

### அரபு மகாநாடு முடிந்தது

கெய்ரோவில்நடைபெற்ற ஐந்து அரபுநாடுகளின் உச்சி மாநாடு முடிவடைந்தது. இஸ்ரேலுக்கெதிரான அரபு நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துவதற்காக நடைபெற்ற இம்மாநாட்டில் அரபுத் தலைவர்களின் குறிக்கோள் நிறைவேறியதா என்பது தெரியவில்லை. மாநாட்டில் அமெரிக்காவின் மேற்காஸிய கொள்கை வன்மையாகக கண்டிக்கப்படுகின்றது.

அமெரிக்கர்கள் அரபுநாடுகளிலுள்ள எண்ணெய்வளத்தைச் சுரண்டி இஸ்ரேலியருக்கு உதவிசெய்கிறார்களென்று அவர்கள் கண்டித்ததாகத் தெரிகின்றது.

ஐக்கிய அரபுக்குடியரசு, ஜோர்டான், சிரியா, ஈராக், சூடான் ஆகிய நாடுகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டன.

ஜோர்டானுக்கும் இஸ்ரேலியதுருப்புகளுக்குமிடையில் நேற்றுக் கடுமையான பீரங்கிச் சண்டை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஜோர்டான்தரப்பில் சேதங்கள் எதுவுமில்லையென்று அம்மானில் ஓர் அதிகாரி கூறினார்.

### இஸ்ரேலிய ரடார்கருவிகள் பறிமுதல்

இஸ்ரேலுக்குக் கொண்டு போவதற்காக இருந்த ரடார் கருவிகள் தொகுதி ஒன்றை சுவிஸ் அதிகாரிகள் பறிமுதல் செய்திருக்கின்றனர். கடந்த மாதமும் இவ்வாறுஇஸ்ரேலுக்கு கொண்டு போவதற்காக வந்த விமான உதிரிப்பாகங்களை சுவிஸ் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். வெளிநாடுகளுக்குக் கொண்டு போவதற்கான ராணுவக் கருவிகள் சுவிட்ஸர்லாந்துக்குள் வரக்கூடாதென்று இந்நாட்டு அரசாங்கம் தடைவிதித்திருக்கின்றது.

## 'கிராமங்கள் சிரமதானம் மூலம்திருத்தப்பட வேண்டும்'

மாவிட்டபுரம், செவ்.

''கிராமங்களில் வீதிகள், குளம் திருத்தல் ஆகியவற்றைக் கிராம முன்னேற்றச் சங்கங்கள் சனசமூகநிலையங்கள் சிரமதான மூலம் செய்வதவசியம். அரசாங்கம் சகல அபிவிருத்திக்கும் பணம் வழங்கமுடியாது. எனவே உள்ளூராட்சி வாரத்தில் கிராம வீதிகள், குளங்கள் ஆகியவற்றைத் ...

பேசிய ஆணையாளர் கூறியதாவது:

''தலைவர்களை ஏற்றி இறக்குவதால் இன்று உள்ளூராட்சி மன்றங்கள் முன்னேறவில்லை. ஆனால் இக்கிராமசபை அங்கத்தவர் யாவரும் ஒன்று சேர்ந்து ஒருவரைத் தலைவராக்கிச் சேவையாற்றுவதால் தான் சபை முன்னேறுகிறது. இப்படியிருப்பதால்தான் இச் ...

பிரஞ்சு ராஜதந்திரி குத்தப்பட்டசம்பவம்

## வேலைக்காரரை பொலிஸ் நாய்காட்டிக்கொடுத்தது

புதுடில்லி, பெப். 10

கல்கத்தாவிலுள்ள பிரான்ஸ் கான்சல் ஜெனரல் குடும்பம் குத்தப்பட்டது சம்பந்தமாக மேலும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் தொடர்புள்ளவர் என்று கருதப்படும் வேலைக்காரர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்

கல்கத்தாவில் உள்ள பிரான்ஸ் நாட்டுப் பிரதிநிதி ஹென்றி (வயது 52), அவருடைய மனைவி நாடியா (வயது 45), இவர்களுடைய மகன் ரினல்டு (வயது 23) பிரான்ஸ் நாட்டிலிருந்து 10 தினங்களுக்கு முன்புதான் இந்தியாவுக்கு வந்து பெற்றோர்களுடன் தங்கியிருந்தார்.

டில்லியில் உள்ள பிரான்ஸ் நாட்டுத் தூதர் ஜே. டாரிடன் மனைவியுடன் இப்போது கல்கத்தா வந்திருக்கிறார்.

அவர்களுக்குச் சனிக்கிழமை இரவு தன்னுடைய வீட்டில் ஹென்றி வரவேற்புக் கொடுத்தார். இரவு 11-30மணிக்கு விழா முடிந்ததும் விருந்து நடந்தது.

டில்லியில் உள்ள தூதரும், மனைவியும் வேறிடத்திற்குத் தூங்கப்போய்விட்டார்கள். அதன் பிறகு ஹென்றி குடும்பத்தினர் படுக்கைக்குப் போனார்கள்.

நள்ளிரவு 2 மணிக்கு 3 மர்ம மனிதர்கள் ஹென்றி வீட்டுக்குள் புகுந்தார்கள். தண்ணீர்க்குழாய் வழியாக முதல் மாடிக்குப் போனார்கள்.

அங்கு ஓர் அறையில் தூதர் ஹென்றியும் மனைவியும் படுத்திருந்தார்கள். கதவு தாழிடப்படவில்லை என்று கருதப்படுகிறது. 3 மர்ம மனிதர்கள் உள்ளே நுழைந்த சத்தம் கேட்டுத் தூதரும் மனைவியும் விழித்துக்கொண்டனர். மர்ம மனிதர்களுக்கும் அவர்களுக்குமிடையில் கைகலப்பு நடந்தது.

தூதரையும், மனைவியையும் அந்த ஆசாமிகள் மாறிமாறிக் கத்தியால் குத்தினார்கள். தூதர் மனைவியின் நெஞ்சில் விழுந்த ஒரு குத்து 7 அங்குல ஆழத்துக்குப் பாய்ந்தது.

சத்தம் கேட்டு, அடுத்த அறையில் படுத்திருந்த தூதரின் மகன் ஒரு பட்டாக்கத்தியுடன் ஓடிவந்தார். பெற்றோர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டார். மர்ம மனிதர்களில் ஓர் ஆசாமியைக் கத்தியால் வெட்டினார். என்றாலும் அவரையும் குத்திப்போட்டுவிட்டு 3 மர்ம மனிதர்களும் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்கள்.

தூதர், மனைவி, மகன் 3 பேர்களையும் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போனார்கள். தூதர் மனைவி இறந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தார்கள்.

தூதரும், மகனும் சிகிச்சை பெற்றுவருகிறார்கள். இருவர் நிலைமையும் கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

துப்புத் துலக்க பொலிஸ் நாய்கள் கொண்டுவரப்பட்டன. 2 பொலிஸ் நாய்களும் தூதர் வீட்டு வேலைக்காரர்மீது பாய்ந்தன. அவரைக் கைதுசெய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கொள்ளை அடிப்பதற்காகவே இந்தச் சம்பவம் நடந்திருக்கவேண்டுமென்று பொலிஸார் கருதுகிறார்கள். ஆனால் எந்தப் பொருளும் கொள்ளைபோகவில்லை.

## தி. மு. க. அரசுக்கெதிராக போராட்டம் நடத்த முடிவு

### 'சிண்டிகேட்' காங்கிரஸ் தீர்மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை, பெப். 10

தி. மு. க. அரசுக்கு எதி... பழைய காங்கிரஸ் (சிண்டிகேட்) கட்சியின் மாநில ... சட்டசபை பழைய காங்கிரஸ் (சிண்டிகேட்) தலைவர் ...

## பிரபுக்கள் சபையில் சார்ள்ஸ் இளவரசர் இன்று பதவியேற்பு



லண்டன், பெப். 11

பிரிட்டிஷ் சிம்மாசனத்தின் வாரிசும், வேல்ஸ் இளவரசருமான சார்ஸ், இன்று (பெப்ரவரி 11ந் திகதி) பிரபுக்கள்சபை அங்கத்தினராகப் பிரகடனப்படுத்தப்படுவார் இங்கிலாந்தின் பாரம்பரிய ராஜரீக சம்பிரதாயத்தின்படி கோலாகலமான முறையில் இவ்வைபவம் நிகழும்.

இந்தச் சம்பிரதாய வைபவம் பல நூற்றாண்டுகாலமாக வளர்ச்சியடைந்து வந்ததாயினும் 1621ம் ஆண்டிலேயே இதற்கு ஓர் உருவம் கொடுக்கப்பட்டது. இளவரசர் சார்ள்ஸ், வேல்ஸ் இளவரசராகப் பட்டஞ்சூட்டப்பட்ட கோலாகல வைபவத்தில் ஒரு சுருக்க நிகழ்ச்சியாக இதனைக் கொள்ளலாம். வேல்ஸ் இளவரசரின் பட்டஞ்சூட்டு வைபவம் பாராளுமன்றத்தில் நிகழவில்லை. ஆனால் பிர... குப் பொறுப்பாயுள்ளனர். புதிய பிரபுக்கள் பதவியேற்கும் வைபவங்களில் இவர்கள் கலந்துகொள்ள அருகதை பெற்றவர்களாயினும் அவர்கள் பெரும்பாலும் பங்குபற்றுவதில்லை. ஆனால் இளவரசரின் இவ்வைபவத்தில் இவர்கள் நிச்சயம் பிரசன்னமாக இருப்பார்கள்.

இவ்வைபவ ஆரம்பத்தில் பிரபுக்கள் சபையினர் சபையில் வீற்றிருக்க சபைமண்டபத்திற்குவெளியேயிருந்து சிறு ஊர்வலமொன்று சபையினுள் பிரவேசிக்கும் இரு ஆணைப் பணியாளர்கள் இந்த ஊர்வலத்தை வழிநடத்த, அவர்களையடுத்து இரு பாரம்பரிய ராஜாங்க அதிகாரிகளும், அவர்களுக்குப் பின்னால் இளவரசரும் அவரையடுத்து பிரபுக்களும் வரிசையாகச் செல்வார்கள். ஊர்வலம் பிரபுக்கள் சபைத் தலைவரான சான்சலரைச் ...

பணம் வழங்கமுடியாது. எனவே உள்ளூராட்சி வாரத்தில் கிராம வீதிகள், குளங்கள் ஆகியவற்றைத் திருத்துவதில் கிராம முன்னேற்ற சனசமூக நிலையங்கள் ஈடுபடவேண்டும்.''

இவ்வாறு யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசப் தெல்லிப்பளைக் கிராமசபை உள்ளூராட்சி வாரத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

தெல்லிப்பளைக் கிராமசபை எல்லைக்குள் உள்ள சைவ-கிருஷ்ண ஆலய விசேஷ பூசைகளையடுத்து கிராம சபை மண்டபத்தில் திரு எஸ். சிதம்பரநாதன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைத்து தொடர்ந்து ஒருவரைத் தலைவராக்கிச் சேவையாற்றுவதால் தான் சபை முன்னேறுகிறது. இப்படியிருப்பதால்தான் இச் சிறந்த கொண்டாட்டத்தைக் கொண்டாடக்கூடியதாக இருக்கிறது.''

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜெயரத்தினம் பேசுகையில் ''உள்ளூராட்சி வாரம் கிராமங்களிலுள்ள சகல துறை மக்களுக்கும் பயனளிக்கவேண்டுமானால் உள்ளூராட்சி மன்றங்களுடன் நிற்காது பாடசாலை, கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலமும் நடாத்தப்பட வேண்டும்'' என்றார்.

திரு. சரவணமுத்து உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

# 15 தொகுதிகளில் தமிழரசு அபேட்சகர்கள்

## மிகுதி பின்னர் தீர்மானிக்கப்படும்

வேலணை செவ்

வேலணையில் அண்மையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எதிர்வரும்பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களைக் குழு தெரிவு செய்தது திருக்கோணமலை. வவனியா, கல்முனை நிந்தாவூர் அம்பாறை பொத்துவில் ஆகிய தொகுதிகள் சம்பந்தமாகப் பின்னர் முடிவெடுககப்படுமென்றும் 15 தொகுதிகளே இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கட்சியின் பொதுச் செயலாளரான திரு. அ. அமிர்தலிங்கம் எம்.பி. தெரிவித்தார். முடிவு செய்யப்பட்ட அபேட்சகர்களும் அவர்கள் போட்டியிடும் தொகுதிகளும்வருமாறு பண்டிதர் கா.பொ.இரத்தினம் ஊர்காவற்றுறைத் தொகுதி, திரு.எம். ஆலாலசுந்தரம் கிளிநொச்சித் தொகுதி, திரு. வி. அழகக்கோன் மன்னார். திரு.எஸ் மாணிக்கவாசகர் கல்குடா, திரு. . ஏ. தங்கத்துரை மூதூர், திரு. எஸ். எம். இராசமணிககம் பட்டிருப்பு திரு. எஸ். இராசதுரை மட்டக்களப்பு' திரு. வி. என். நவரத்தினம், சாவகச்சேரி, திரு. ஸி. எக்ஸ் மார்ட்டின் யாழ்ப்பாணம், திரு. ரி. துரைத்தினம் பருத்தித்துறை, திரு. ஈ. எம். வி. நாகநாதன் நல்லூர், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறை; திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை கோப்பாய், திரு. அ. அமிர்தலிங்கம் வட்டுக் கோட்டை, திருவி. தர்மலிங்கம்உடுவில்.

கருவிகள் சுவிட்ஸர்லாந்துக்குள் வரக்கூடாதென்று இந்நாட்டு அரசாங்கம் தடைவிதித்திருக்கின்றது.

# நோர்வே மாணவருக்கு தண்டனை

மாஸ்கோ, பெப். 10

சோவியத் அறிஞர்கள் மீதான கட்டுப்பாடுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்திய நோர்வேஜியன் மாணவடுக்கு சோவியத் நீதிமன்றம் ஒன்றில் ஒரு வருடம் தொழிலாளர் முகாமில் வேலைசெய்வதற்கான தண்டனை விதிக்கப்பட்டது. இம்மாதிரிக் குற்றம் புரிகிறவர்களை முன்னர் சோவியத் யூனியன் நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது மேலும் பலர் இம் மாதிரியான குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

# பாங்கொக் மாநாடு

லண்டன், பெப் 10

12 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 23 சமூக நலப் பிரதிநிதிகள் இன்று பாங்கொக்கில் கூடவிருக்கின்றனர். இலங்கைப் பிரதிநிதியும் இதில் கலந்துகொள்கிறார்.

சமூகநலத் திட்டங்கள் பற்றி இந்த மகாநாட்டில் ஆராயப்படும். உலகபொருளாதார ஆணைக்குழுவும் ஐக்கிய நாட்டுக் குழந்தைகள் பராமரிப்பு ஸ்தாபனமும் கூட்டாக ஒழுங்குசெய்துள்ள இந்தமாநாடு முடிந்ததும் இவர்கள் பிலிப்பைன்சுக்குச் சென்று அங்கும் இதுபற்றி ஆராய்வர்.

# 'சிண்டிகேட்' காங்கிரஸ் தீர்மானம்

சென்னை, பெப். 10

தி. மு. க. அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதென்று தமிழ் நாடு சிண்டிகேட் காங்கிரஸ் கட்சி முடிவு செய்திருக்கின்றது.

பழைய காங்கிரஸ் (சிண்டிகேட்) கட்சியின் மாநில மாநாடு சேலத்தில் நடந்தது. 3-வது நாளன்று அரசியல் மாநாடு நடந்தது. இதில் காமராஜர் டெல்லி சட்டசபை பழைய காங்கிரஸ் (சின்டிகேட்) தலைவர் ராம் சுபக்சிங் தாரகேசுவரி சின்கா ஆகியோர் பேசினர்கள்.

காரியக்கமிட்டி தயாரித்து வைத்திருந்த எல்லாத் தீர்மானங்களும் அரசியல் மாநாட்டில் ஒருமனதாக நின்றவேற்றப்பட்டன.

பொருளாதார தீர்மானம் பற்றி விவாதம் நடக்கும் போது தி, மு. கழக அரசை எதிர்த்து போராட்டம் நடத்த நாள் குறிக்கவேண்டும்' என்று ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது 2 எம். எல். ஏக்கள் உட்பட இளைஞர் கோஷ்டி இந்தத் திருத்தத்தை கொண்டுவந்தது.

இதற்குப் பதிலளித்து சட்டசபை உறுப்பினர் கே. விநாயகம் பேசுகையில் போராட்டத்திற்கான தேதியை தகுந்த சமயத்தில் காமராஜர் அறிவிப்பார் என்று கூறினர்.

அதனல் திருத்தம் வாபஸ் பெறப்பட்டு தீர்மானம் நிறைவேறியது.

மாநாட்டில் ராம்சுபக்சிங் பேசுகையில் கூறியதாவது.

இந்திராகாந்திக்கு நிர்வாகம் செய்யத் தெரியவில்லை. அவர் ஆட்சிக் காலத்தில் உற்பத்தி பெருகவில்லை. வெளிநாட்டு கடன் சுமை தான் பெருகி இருக்கிறது. திடீர் சோஷலிசம் பேசும் இந்திராகாந்தி முதலில் எல்லோருக்கும் வேலைவாய்ப்புக் கொடுக்கவேண்டும். அவர் பேசும் சோஷலிசம் ஏட்டுச் சுரைக்காய் போன்றது. அது கறிக்கு உதவாது.

காமராஜர் பேசுகையில் கூறியதாவது:-

இந்திராகாந்தி தன்னிடம் உள்ள அதிகாரத்தின் மூலம், தனக்கு பிடிக்காத முதல்-மந்திரிகளை கவிழ்க்கபார்க்கிறார் இவ்வாறு செய்வதால் கிளர்ச்சிகள் ஏற்படும்.

நேரு பிரதமராக இருந்த போதும் பெரும்பான்மை கருத்துக்கு மதிப்புக் கொடுத்து வந்தார். ஆனல் இந்திராகாந்தி பெரும்பான்மை கருத்துக்கு மதிப்பு கொடுக்காமல் தன் இஷ்டம் போல் நடந்துவருகிறார். அவர் இஷ்டம்போல நடக்க விரும்பினல் அவ்வாறு நடக்க விடமாட்டோம்.

பூகோள கடிகாரம்

# பிரி. சிறுவனின் அதிசய கண்டுபிடிப்பு

லண்டன், பெப். 10

16 வயது நிரம்பிய பிரிட்டிஷ் பாடசாலை சிறுவன் ஒருவன் புதுமையான கடிகாரம் ஒன்றை கண்டுபிடித்திருக்கிறான். பூகோள கடிகாரம் என அழைக்கப்படும் இந்த அதிசய மணிக்கூண்டு உலகத்தின் எப்பகுதியினதும் நேரத்தை கணிப்பிட்டுக் காட்ட வல்லது.

இக்கடிகாரம் பூகோளபட அமைப்பைக் கொண்டது. 24 மணிநேரத்திற்கு ஒரு தடவை சுழலும் இக்கோளம் மணிப்பொறி ஒன்றுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. பூகோளப் படத்தின் நெடுங்கோடுகளுடன் கணிததுப் பார்த்தால் உலகின் எப்பகுதியினது நேரத்தையும் நொடிப்பொழுதில் அறிந்து விடலாம்.

இந்த மணிக்கூண்டு, அடிப்படையில் சூரிய நேரப்பொறி போன்று எந்நேரமும் இயங்கிக் கொண்டிருக்கும் ஒருவகை இயந்திர கடிகாரத்தை ஒத்தது. வட இங்கிலாந்தைச் சேர்ந்த ஜோன்சன் எனப்படும் இந்தச் சிறுவன் பள்ளிக்கூடத்தில் வான சாஸ்திரம் படித்துக்கொண்டிருந்த போதே இதனைக் கண்டுபிடித்தான். ஆரம்பத்தில் இப்பூகோள கடிகாரத்தை அவன் உருவாக்கிய பொழுது, அவனது பெற்றோர்கள் அதுபற்றி பிரமாதமாக எதுவும் நினைக்கவில்லை. ஆனல் இப்பொழுது பல பிரிட்டிஷ் உற்பத்தி நிறுவனங்கள் இக்கண்டுபிடிப்பில் பெரிதும் அக்கறை காட்டுகின்றன.

''சுழலும் பூகோளக் கடிகாரம்'' என்று இதற்கு இச்சிறுவன் பெயரிட்டிருக்கிறான், ''இது பெரிதும் பயன்படத்தக்கது. வர்த்தக உலகிற்கு இதுவொரு வரப்பிரசாதம் என்றேசொல்லுவேன். கணக்கிட்டு குழம்பிக்கொண்டிராமல் உலகின் எப்பகுதி நேரத்தையும் இதன்மூலம் அறிந்துகொள்ளலாம்'' என்று அச்சிறுவன் பெருமிதத்துடன் கூறினன்.

கல வைபவத்தில் ஒரு சுருக்க நிகழ்ச்சியாக இதனைக் கொள்ளலாம். வேல்ஸ் இளவரசரின் பட்டஞ்சூட்டு வைபவம் பாராளுமன்றத்தில் நிகழவில்லை. ஆனல் பிரபுவாக அவர் பிரகடனப் படுத்தப்படும் இந்நிகழ்ச்சி பாராளுமன்றத்தில் நிகழ்வதால், இளவரசரின் அந்தஸ்து தேசிய ரீதியில், பூரணமாக அங்கீகரிக்கப்படுகிறது என்பதுதான் அர்த்தம்.

இங்கிலாந்தின் பாரம்பரிய ராஜாங்க அதிகாரிகளாகக் கருதப்படும் மார்ஷல் பிரபுவும், பெரிய சம்பர்லின் பிரபுவும் இவ்வைபவத்திற அதிகாரிகளும், அவர்களுக்குப் பின்னல் இளவரசரும் அவரையடுத்து பிரபுக்களும் வரிசையாகச் செல்வார்கள். ஊர்வலம் பிரபுக்கள் சபைத் தலைவரான சான்சலரைச் சென்றடைந்ததும், இளவரசர் அவருக்கு முன்பாக முழங்காலிட்டுத் தனது நியமனப் பிரகடனப் பத்திரத்தை அவரிடம் கையளிப்பார். இதன் பின்பு நடைபெறும் சில சம்பிரதாய நிகழ்ச்சிகளையடுத்து இளவரசர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டு நியமனப் பத்திரத்தில் கைச்சாத்திடுவார்.

# வாஷிங்டனில் இலங்கை கலாசார கண்காட்சி

வாஷிங்டன், பெப். 10

'இலங்கைக்கு நீங்கள் சென்றீர்களானல் அங்கு அதன் கலைப்பண்பில் நாட்டங் கொள்ளாது திரும்புதல் இயலாத காரியம். இலங்கையில் கலாச்சாரப் பண்பு உயர்வுற்று விளங்குவதைக் காணலாம்'.

இங்கு நடைபெற்ற இலங்கையின் கலாச்சார மரபுக் கண்காட்சி பற்றிக்கருத்துத் தெரிவிக்கையில் சர்வதேச புவியியல் சங்கத்தின் உப தலைவர் திரு. கில்பேட் எம். குறெஸ்வெனர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த உணர்ச்சி இச் சங்க மண்டபத்தில் இக் கண்காட்சியைக் காணவந்திருந்த 250 சித்திரக் கலைஞர்கள், உயர்தர அரசாங்க அதிகாரிகள், மற்றும் அறிஞர்கள் ஆகியோரிடத்திலும் பிரதிபலித்தது இக்கண்காட்சியில் 70 சித்திரங்களும் பல கல்லிலே செதுக்கப்பட்ட உருவங்களும் இடம் பெற்றன. இக் கண்காட்சிக்கு வந்திருந்த இலங்கையின் புகழ் பெற்ற சித்திரக் கலைஞரான 18 வயது சேனகா சேனநாயக்க அங்கு யாவரது கவனத்தையும் கவர்ந்தார். அறிஞர்கள் அவரது வேலையைப் பாராட்டி அவரோடு பேசியபோது 'இலங்கைக்கு வெளியே இந்தச் சித்திரங்களை முதல் தடவையாக கண்காட்சிக்கு அளித்துள்ளேன்' எனக்குறிப்பிட்டார் இவரது சித்திரங்க

4-ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கா சாதனை: மின்விசையைக் கொண்டு மீன்பிடிக்கும் புதுமுறை

நியூயோர்க்பெப்10'

தூண்டிலும் வலையும் கொண்டு மீன்பிடிக்கும் தொழிலுக்கு இனி புதியதோர் நுட்பமும் கைகொடுக்கக்கூடும். அதுதான் மின் விசைகொண்டு மீன் பிடிக்கும் புதுமையான நுட்பம்.

அதுவும் இன்னும் ஓர் 20 ஆண்டிற்குள் உலகமெங்கும் புழக்கத்துக்கு வந்துவிடுமென்று தெரிகிறது,

இப்பொழுது நல்லதண்ணீர்க் குளங்கள், ஆறுகள் முதலிய நீர்நிலைகளில்மின்விசை கொண்டு மீன்பிடிக்கும் முயற்சி ஆராய்ச்சியளவில் பலன்காட்டியுள்ளது. இந்த நுட்பத்தை சிக்கனமான முறையில் உப்புத்தண்ணீர் உள்ளநீர் நிலைகளுக்கும் ஏற்றதாக மாற்றுவது தான் இனிவேலை இதில் தான் இன்னும் இடர்ப்பாடுகள் உள்ளன. ஆயினும் ஆராய்ச்சி வெற்றி பெறும் என்பது பற்றி விஞ்ஞானிகளுக்கு ஐயம் இல்லை.

## எப்படி எனில்

மீனைப் பிடிக்க மின்விசையைப் பயன் படுத்துவது எப்படி? மீன்பிடிக்கச் செல்லும்படகிலே போதிய மின் விசைஉற்பத்தி வசதியிருக்கும். அதனை வலையோடுமின்வாய் (எலக்ரோடு)கள் மூலமாகப் பொருத்தி, படகு செல்லும் தண்ணீரில் மின் விசை மண்டலம் ஒன்றைத் தோற்றுவிப்பர். அதுஅங்கு அக்கம் பக்கத்திலுள்ள மீன்களைக் கவர்ந்து இழுக்கும். ஆகவே மீன்கள் வந்து வலையில் விழும் விழுந்த மீன்களைப்படகுகுள் இழுத்துப் போடுவதற்கும் நீர்இறைக்கும் குழாய் போல் ஓர்இறைவைக் கருவியை அமைத்துக் கொள்ளலாம்.

மின்விசைகொண்டு மீன் பிடிக்கும் போது, விற்பனைக்குதகுந்த் வகையான மீன்களையும் தகுந்த அளவான மீன்களையும் மட்டும் பிடிக்க வகை செய்யலாம். இன்னுய் ஒன்று மின்விசையால் மடியும் மீன்கள் துடித்து இறப்பவற்றை விடச்சுவையாகவும் இருக்கின்றன.

மீன்பிடிக்க மின்விசையைப்பயன் படுத்துவது குறித்து அமெரிகாவில் தொடர்ந்து ஆராய்ச்சி நடந்து வருகிறது.

## சிக்கனமாகுமா?

நல்ல தண்ணீரில்மீன்பிடிக்கச் சிறிது மின்விசைபோதும் ஆனல் உப்புத் தண்ணீரில் மீன்களைக்கவரத்தக்க இடையருமின்விசைமண்டலத்தை உண்டுபண்ண மேற்கொண்டு 500 மடங்குமின்விசைவேண்டியிருக்கிறது. இவ்வளவு பெரிய அளவில் மின்விசை வழங்குவதற்கு வேண்டிய கருவியும் இடத்தை மிக அடைக்கும் செலவும் மிக இழுக்கும்.

ஆகவே இடையருத மின் விசை மண்டலத்தை உண்டு பண்ணுவதற்குப் பதிலாக இடைக்கிடை மட்டும் மின் விசைத்துடிப்புகளை நீரில் பரப்பும் நுட்பத்தைக் கையாளலாம். இதற்கு அதிக மின் விசை தேவை இல்லை.

## மிகப்பெரிய முன்னேற்றம்

'மனிதன் மீன் பிடிக்கத் தொடங்கிய காலத்துக்குப் பிறகு ஏற்படக் கூடிய மிகப் பெரிய முன்னேற்றம் மின் விசையால் மீன்பிடிக்கும் நுட்பமாகவே இருக்கக் கூடும்'' என்கிறார் அமெரிக்க அரசின் மீன்வளத்துறை அதிகாரி வில்லியம் எச். ஸ்டீவன்ஸன்.

''மீன்குஞ்சுகளையும் நீரில் வாழும் உயிரினங்களையும் கொன்று விடாதபடி தகுந்த அளவும் ஏற்ற வகையுமான மீன்களை மட்டும் கவர்ந்து இழுப்பதற்கு எவ்வளவு மின்விசை தேவை என்று துல்லியமாகக் கண்டு பிடிப்பதற்கு ஆராய்ச்சி செய்ய வேண்டும்'' என்கிறார் ஸ்டீவன்ஸன்.

ஏற்கெனவே அமெரிக்காவின் தென் குடாக் கடலில் இறால் மீன் பிடிப்பதற்குச் சிலர் மின்விசையைப் பயன் படுத்துகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

என்னைப்பொறுத்தமட்டில் சமயமின்றி அரசியலில்லை. சமயம் அரசியலுக்குத் துணைபுரிகிறது.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna.

Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் தைமாதம் 29-ந் திகதி (11-2-70)

## நன்றி

இன்று 'ஈழநாடு' பத்திரிகைக்கு பன்னிரண்டாவது ஆண்டு பிறந்துள்ளது. இந்த நன்னாளிலே தன்னை இதுவரை ஆதரித்து வளர்த்துவரும் பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கும் தனது உளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் 'ஈழநாடு' தெரிவித்துக் கொள்கின்றது.

சென்ற ஆண்டிலே யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தலைநகரான கொழும்பிலும் பல கலைவிழாக்களை 'ஈழநாடு' நடத்தி ஈழத் தமிழரின் பேராதரவையும் பாராட்டுதலையும் பெறறது. உடனுக்குடன் செய்திகளை வெளியிடுவதுடன் தமிழரின் உள்ளக் கருத்துக்களை உள்ளபடி தெரிவிப்பதுடன் மட்டுமல்லாது தமிழ்க் கலைகளையும் கலைஞர்களையும் வளர்க்க 'ஈழநாடு' ஸ்தாபனம் செய்யக்கூடிய பணி அதிகமுள்ளதென்பதையும் இதனால் உணர்ந்தோம்.

இந்த வருடத்திலே ஈழநாடு' புத்துயிர் பெற்று புது உணர்ச்சியுடனே தமிழர்களுக்கும் நாட்டுக்கும் தொண்டாற்றுவதற்கான புதிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன வென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். 'ஈழநாடு' தமிழர்களாகிய உங்கள் பத்திரிகை, பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் மதிப்பு வாய்ந்த கண்ணியம் மிக்க ஒரு நல்ல பத்திரிகையென்று பல்லாராலும் போற்றப்படும் பாக்கியம் பெற்றுள்ள 'ஈழநாடு' தனது பணியை விருப்பு வெறுப்புகளின்றி தமிழரின் மேலான நன்மைக்கான முறையில் செய்ய திருவருள் தக்க வாய்ப்பளிக்குமென்று நம்பிக்கையுடன் வழுத்துகின்றோம்.

# ''உள்ளூர் ஆட்சி அதிகாரம் விரிவுபடுத்தப்பட வேண்டும்''

மாவிட்டபுரம், செவ்வாய்

''உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும். கச்சேரி நிர்வாகத்தைப் பரவலாக்கி, மாகாண ஆட்சி முறையை ஜனநாயகம் உள்ளதாக ஆக்குவதற்கு ஊர் மன்றங்களின் அதிகாரங்களை அதிகரிக்கச் செய்வதே ஒரு வழி. ஜன சமூக நிலையங்கள் ஊர் ஆட்சி அமைப்பில் ஒரு சிறந்த இடத்தை வகிக்கின்றனர்.''

இவ்வாறு தெல்லிப்பழைக் கிராமசபை எல்லைக்குள் ஐக்கியவாலிபர் சனசமூகநிலைய விளையாட்டுமைதானத்துக்கு அத்திவாரக்கல்நாட்டு வைபவத்தில் கலந்துரையாற்றுகையில் மல்லாகம் கிராம சபைத்தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

கல் நாட்டி அங்குரார்ப்பணம் செய்த யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப் பேசுகையில் கூறியதாவது:-

''கலாச்சாரத்துறையிலும் சமூகத்துறையிலும் ஒரு மறு [illegible]

யங்களே சிறந்தவொண்டாற்றுவதற்கு தகுதியுடையவை உள்ளூராட்சி வாரத்தின் போது இத்தகைய ஆக்கப் பணிகளை எங்களால் பாராட்டாமல் இருக்கமுடியாது''

திரு. எஸ். நாகமணி தலைமையில் நடந்த இவ்விழாவில் தெல்லிப்பழை கிராம சபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதனும் பேசினர். திரு. ஆ. சின்னத்துரை நன்றி கூறினர்.

## நோயாளர் கஷ்டம்

### டாக்டர் கவலை

கைதடி, செவ்வாய்

கைதடி அரசினர் ஆஸ்பத்திரிக்கு அரியாலை, கச்சேரி, கொழும்புத்துறை, மட்டுவில், நுணுவில் பகுதிகளிலிருந்து சராசரி 150க்கு மேற்பட்ட நோயாளர்கள் வந்து சேருகிறார்களாம். இவர்கள் டாக்டரின் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டபொழுதிலும்

# “சுந்தரர்” இசை நாடகம்

# இராமநாதன் மாணவிகள் வெற்றி

## பஸ்ஸுக்காக கடும் தவம்

சங்கானை, திங்கள்

வலிகாமம் மேற்குப் பகுதியில் காலையில் சேவையில் ஈடுபட்டுள்ள பாடசாலை இ. போ. ச. பஸ் மாலையில் சேவையில் ஈடுபடுவதில்லை. இவ்வழியே சேவையில் ஈடுபட்டுள்ள ஏனைய பஸ்கள் வீடு திரும்புவதற்கு பஸ்வரவை காத்துநிற்கும் பிள்ளைகளை ஏற்றுமல் சேவையிலீடுபடுகின்றதாம். இதனால் தூர இடங்களிலிருந்து பாடசாலைவரும் பிள்ளைகள் பல மணிநேரம் பாடசாலைமுன் கால் கடுக்க பஸ்ஸிற்காக கடும் தவம் புரியவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வீடுதிரும்பாத பிள்ளைகளை தேடி பெற்றோரும் செலல நேரிடுகின்றது,

— —

## வடபகுதி தலைமை அலுவலகம் கைதடியில்

கைதடி, செவ்வாய்

இரட்சண்ய சேனையின் வடபகுதித் தலைமைக்காரியாலயம் கைதடியில் நிறுவப்பட்டுவருக்கிறது. இதற்கான காணியை கைதடி அரசினர் ஆஸ்பத்திரிக்கருகாமையில் அரசாங்கத்திடமிருந்து 2 ஏக்கர் நன்கொடையாகப் பெற்றிருக்கிறார்கள்.

இதில் தேவாலயம், பாலர் விடுதி, பெண்கள் விடுதி, நிர்வாகக் காரியாலயம் போன்ற பல கட்டிடங்கள் இடம்பெற இருக்கின்றன.

இத்திட்டத்திற்கு இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

......

## 'இவர்கள்தான் காரணம்'

ஊரதீவு, செவ்வாய்

''1956-ம் ஆண்டுக்குமுன் தமிழினம் தென்னிலங்கையில் தலைநிமிர்ந்து வாழ்ந்தது. இன்று தென்இலங்கையில் மட்டுமல்ல வடஇலங்கையிலும்கூட தமிழினம் தலைநிமிர்ந்து வாழமுடியாதிருக்கிறது. தமிழரசாரின் சத்தியாக்கிரகப் போராட்டத்தின்மூலம், இங்கு வந்த ராணுவத்தின் கெடுபிடியே இதற்குக்காரணம்'' என தீவுப்பகுதி தமிழ்க்காங்கி

இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் ஈடுபடும் எந்தப் புனிதப்பணியும் வெற்றியுடனேயே திகழும் சென்றவாரம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலே அக்கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தின் கொழும்புக் கிளையினர் திருக்கேதீச்சரத் திருப்பணிக்காக நடத்திய 'சுந்தரர்' இசை நாடகம் அழகாக சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதாக இருந்தது. மண்டபம் நிறையக் கூடியிருந்த ரஸிகர்கள் ஆரம்பம் முதல் கடைசிவரை இருந்து பெரிதும் ரஸித்தனர்.

பெண்கள் ஆண்வேடம் பூண்டு நடிப்பதென்பது சுலபமன்று. கடினமான அந்தக் காரியத்தை அக்கல்லூரியின் பழைய மாணவிகள் வெற்றிகரமாக நிறைவேற்றியது பெரிதும் போற்றத்தக்கதாகும்.

சைவ சமய குரவர்களில் ஒருவரான சுந்தமூர்த்தி நாயனாரின் கதையை புராண நெறி தவறாமல் நாடகமாக்கியுள்ளனர். கைலாயத்திலே நந்தவனக் காட்சியுடன் நாடகம் ஆரம்பமாகிறது. சிவபெருமானுக்காக பூக்கொய்த ஆலால சுந்தரர்க்கும் உமையம்மைக்காக மலர் பறித்த கமலினி, அநிந்திதைக்கும் காதல் அரும்பும் அழகிய காட்சி மனதைக் கவர்கின்றது. இவர்களது காதலை உணர்ந்த சிவபெருமான் அவர்கள் பூவுலகில் சென்று மணந்து வாழ அருள் செய்கின்றார். பிரபஞ்ச வாழ்க்கையில் மயங்கி நிற்கும் வேளையிலே தம்மை தடுத்தாட் கொள்ளவேண்டுமென்று சுந்தரர் வேண்ட. அவ்வண்ணவே வாக்களிக்கிறார் சிவபெருமான். இது இரண்டாவது காட்சி. காட்சி சோடனைகள் பொருத்தமாகவும் கவச்சியாகவுமிருந்தன. வானத்திலே பிறைச்திரன் பிரகாசிக்க, மேகங்களை அலை அலையாகச் சென்றதைக் காட்டியது தத்ரூபம்.

திருவாலூரிலே சுந்தரருக்கும் சடங்கவி சிவாச்சனியாரின் மகளுக்கும் திருமண ஆயத்தம் நடந்து கொண்டிருக்கையில் சிவபெருமான் கிழப்பிராமணர் வடிவில் தோன்றி, தடுத்தாட் கொள்ள வருகிறார். கிழவராக நடித்த [illegible] நடிப்பு, [illegible] எல்லாம் முதல்நம்பர். தன்

,,பித்தா பிறைசூடி'' என்று சுந்தரர் இறை அருளை வியந்து அகக்கண் திறந்து அழகாகப் பாடும் காட்சி மறக்க முடியாது.

பின்னர் திருவாரூர் கோயிலிலே நடைபெற்ற பரவையாரின் நடனம் பக்தியும் கலையழகும் கலந்து சுந்தரரின் மனதைக் கவர்ந்ததில் வியப்பில்லை. இவ்வித புனிதமான பரத நாட்டியத்தை இக்காலத்திலும் கோவில்களில் ஏன் நடத்தக் கூடாது என்று தோன்றியது. பல கலைகளையும் வளர்த்த கோவில்களில் இந்த அருங்கலையை இனியும் பகிஷ்கரிக்கக் காரணமில்லை. இக்காலத்தில் பரதம் ஆடுவதெல்லாம் குடும்பப் பெண்களேயாதலால், அதை இப்புனிதமான கோவில் சூழ் நிலையில் ஆடுவதால் என்ன தீங்கு ஏற்பட முடியும்?

பரவையை திருமணம் செய்ய விரும்பிய சுந்தரர், அந்தக் கோரிக்கையை, திருவாரூர் பெருமானிடமே கேட்டுப் பெறுகின்றார். பின்னர் பரவையின் ஊடலைத் தீர்க்கவும், சங்கிலியாரைத் திருமணம் செய்யவும், இறை உதவியையே நாடி பெறுகின்றார். நமக்கு எது வேண்டுமாயினும், அதை இறைவனிடம் கேட்டுப் பெறமுடியுமென்பதை இவை காட்டுவதாகவுள்ளன. வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு. தாம் கொடுத்த வாக்குறுதியை மீறியதால் கண்பார்வை இழக்கிறார் சுந்தரர். பின்னர் தன் தவறை உணர்ந்து இறைவனைத் துதித்து மீண்டும் பார்வையைப் பெற்று பல திருப்பதிகங்கள் பாடி, தன்காரியத்தை முடித்துக் கொண்டு கைலயம் திரும்புகிறார். நாடகமும் 18 காட்சிகளுடன் கச்சிதமாக முடிகிறது.

கதா நாயகராக நடித்த சுந்தரரின் வேடப்பொருத்தமும், இனிய குரலும் நடிப்பும் பலர் உள்ளத்தையும் கவர்ந்து நாடகத்தின் வெற்றிக்குப் பெரிதும் காரணமாக இருந்தன.

திருக்கேதீச்சரம் கோவிலில் லீலாவதி ராமநாதன் பெயரால் நவக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்வதற்காப் பணம் திரட்ட நடைபெற்ற இந்த நாடகத்தின் நோக்கம் எதிர்பார்த்ததை விட அதிக வெற்றி பெற்றது பாராட்டத்தக்கது. பக்தியை வளர்க்கும் நல்ல நாடகங்களை பொதுமக்கள் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதை இதன் மூலம் அறிய முடிந்தது. மூர்த்தி நாயனார் பாடியுள்ள திருக்கேதீச்சர திருப்பதிகம் முழுவதையும் பொருத்தமான இத்தில் பின்னணியில் பாடியிருக்கலாம். பரவையார் தம் வீட்டுக்கு சுந்தரரை மீண்டும் வரவேற்கையில் தீக்குச்சி கொண்டு குத்து விளக்கு ஏற்றியதற்கு பதில் கைவிளக்காய் ஏற்றியிருப்பின் அதிக பொருத்தமாக இருக்கும். சுந்தரர் காலத்திலே தீப்பெட்டி ஏது? மூல ஓலையில் கையெழுத்திட்டிருந்த சாட்சிகள் மிக இளைஞர்களாகவே இருந்தனர். தாடிகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லைப் போலும்! இவ்வித சிற்சில குறைகள் திருஷ்டி பரிகாரம்போல் இருப்பினும் இந்த நாடகத்தை பலவிதங்களிலும் வெற்றிகரமாக நடத்திய அனைவரையும் பெரிதும் பாராட்டவேண்டும்.

இந்நாடகத்தை தமிழகத்தில் நடத்துவது ஈழத்துக்குப் பெருமையளிப்பதாகவும் பல விஷயங்களிலும் பயனுள்ளதாகவும் இருக்கும்.

-சித்திரா-

நாடகவிமர் சனம்,

## 'வாசிற்றிவனிதை'

பல்கலைக் கழகத்தில் படிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட ஒரு கிராமியப் [illegible] குடும்பத்தை [illegible] வைத்து எழுதப்பட்டது இந்த ''வாசிற்றி

னையுலும் அவர் பாத்திரமாகவே மிளிந்தார். ஒப்பனையம் அவரை அவ்வளவாகக் காட்டிக் கொடுக்கவில்லை. மணியின் தந்தையை பொன்னையாவாக நடித்த திரு. பி. பி. காந்தன் பாத்திரத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டிலும் நகரிலும்

நெல் முதலிய தானியங்களையும் மிளகாய் முதலிய உப உணவுப் பொருட்களையும் விளைவிக்கும் விவசாயி இலங்கையின் எதிர்கால உணவு தன்னிறைவுக்கு வழி கோலுகிறான் என்றால் தோட்டப்பகுதிகளில் பாடுபட்டு உழைக்கும் தொழிலாளியே நாட்டின் இப்போதைய பொருளாதாரத்துக்கு பொறுப்பானவன் என்று சொன்னால் அது மிகையாகாது.

தோட்டத் தொழிலாளி நாட்டுக்கு உரம் போன்றவன். உரமிட்ட வயல் நன்ருகச் செழித்து பலன்தரும். பயிருடன் கலந்து விளைச்சல் தந்தபின்பு உரம் அநேகமாக மறைந்துவிடும். தோட்டத் தொழிலாளியின் உழைப்பின் பலனாகத்தான் தேயிலையும் ரப்பரும் வெளிநாடுகளுக்குப் போய் எமக்கு பணத்தைக் கொண்டு வருகின்றன. உரம் எப்படி வயலுக்கு முக்கியமானதோ அதுபோலத் தோட்டத் தொழிலாளியும்நமதுபொருளாதாரத்துக்கு இன்றியமையாதவன். ஆனால் விளைச்சல் தந்த உரத்தை நாம் மறந்துவிடப்படாது. உரம் மீண்டும் மீண்டும் தேவைப்படும்.

கடந்த சனிக்கிழமை, சுமார் ஆறு லட்சம் தோட்டத் தொழிலாளர் நடத்திய அடையாள வேலை நிறுத்தம், தமது தொழில் நிலைமையிலும் ஊதியத்தில் பொதுவாகவாழ்க்கைத்தரத்திலும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியையே காட்டுகிறது.

பெரும்பாலான தோட்டங்களில் இன்னும் பழைய 'கொலோனியல்' ஆட்சி காலத்து நிலைபரங்களே இருந்து வருகின்றன. தொழிலாளிகளும் அவர்கள் குழந்தை குட்டிகளும் சுகாதாரமில்லாத பழைய 'லைன்'களிலேயே வசிக்கின்றனர். அவர்களுக்குபோதிய வைத்திய வசதிகள் கிடையாது கல்வி வசதிகள் கிடையாது. தோட்ட வேலையை விட்டால் அவர்களுக்கு வேறுவேலை வசதி கிடையாது. யாரும் அவர்களை வேறு வேலைக்களுக்கு அமர்த்திக்கொள்ள ஒப்பமாட்டார்கள், வேறுவேலைதேடி அவர்கள் நகர்ப் புறங்களுக்கு புறப்பட்டாலும் எந்தச்சமயத்தில் 'கள்ளத் தோணி' என்று கைதுசெய்யப்படுவார்களோ என்ற பயம் வேறு.

இந்த நிலையில் அவர்களை திருப்தியாயும் சந்தோஷமா

கும். அதுவே மனித நீதிக்கேற்ற செயல். அப்படி நடக்கவில்லை என்பதையே அடையாள வேலைநிறுத்தம் காட்டுகிறது.

நீண்டகாலப்போராட்டத்துக்குப்பின் தோட்டத் தொழிலாளிகளுக்கு நாட்சம்பளத்தில் பத்துசதம் கூட்டப்பட்டது. பத்துசதம் இந்தக் காலத்தில் எந்த மூலைக்கு? அப்படியும் பெரும்பாலான தோட்டங்களில் தொழிலாளிகளுக்கு வாரத்தில் ஆறுநாள் வேலை கிடைப்பதில்லை. மூன்று நான்கு நாட்களுக்கு வேலைகொடுக்கப்படுகிறது.

தங்கள் அதிருப்தியை தெரிவிக்கும் நோக்கத்துடன் அவர்கள் வேலைநிறுத்தம் செய்தால் முதலாளிகளின் தூண்டுதலுக்கிணங்க பொலிசார் அட்டா துட்டி நடவடிக்கைகளில் இறங்கி அவர்களை அடித்துத் துன்புறுத்தி அவமானப் படுத்துகிறார்களாம். தோட்டத் தொழிலாளிகளைத்தொடர்ந்துஇந்த நிலையில் வைத்திருப்பது காலப்போக்கில் நாட்டின் பொருளாதாரத்தைப்பாதிக்கக் கூடும்.

0 0 0

யாழ்ப்பாணத்தில் சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கு மிடையில் ஏற்பட்ட சம்பளப் பிணககு ஒரு மாதத்துக்குமேலாகியும் இன்னும் தீர்ந்த பாடாய்க் காணவில்லை. சில இடங்களில் தொழிலாளிக்கும் தொழிலாளிக்கும், சிலஇடங்களில் தொழிலாளிக்கும் முதலாளிக்குமிடையில் கைகலப்பும் வன்முறைச் செயல்களும்ஏற்பட்டது கவலைக்கிடமான விஷயம். சில முதலாளிகள் வழக்கமான சுருட்டுக்கொட்டிலை விட்டுவிட்டு வேறு மறைவான இடங்களில் தங்களுக்கு சாதகமான சிலதொழிலாளிகளுடன் சுருட்டு விற்றிவிப்பதாயும் இதனால் கோபங்கொண்ட மற்றைய தொழிலாளிகள் அடிதடியில் இறங்கியதாகவும் தெரியவருகிறது. இந்த பிரச்னையும் தோட்டத் தொழிலாளர் பிரச்னையைப் போலத்தான் விரைவில் ஒரு தீர்வுகாணவிட்டால் நஷ்டமடைவது தொழிலாளிகளும் முதலாளிகளும் அவர்களுடைய குடும்பங்களுமே இந்த கலகத்தின் விளைவாக யாழ்ப்பாணம் சுருட்டுவெளியூர்களுக்குபோவது குறைந்து பாவனையாளர்கள் பீடி, சிகரெட் முதலியவற்றில் விழுந்து விட்டால் நஷ்டம் யாருக்கு?

தார்.

கல் நாட்டி அங்குரார்ப் பணம் செய்த யாழ். உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப் பேசு கையில் கூறியதாவது:-

"கலாச்சாரத்துறையிலும் சமூகத்துறையிலும் ஒரு மறு மலர்ச்சியை உள்ளூராட்சி மன்றங்கள் ரீதியாக சன சமூகநிலையங்கள் ஏற்படுத்த வேண்டும். மக்களின் தேவை களைக்கருத்தில் கொண்டு செயல் படும். சனசமூக நிலை

## இந்தியாவின் 52 வது கப்பல்

புதுடில்லி, பெப் 10

இந்துஸ்தான் கப்பல்கூட த்தில் கட்டப்பட்ட 52வது கப்பல் இன்று கடலில் வெள்ளோட்டம் விடப்பட் டது. இக்கப்பலின் பெயர் வித்தியோ விக்கிரம என்ப தாகும். இந்தக் கப்பல் கூடம் மேலும் 14 கோடி ரூபா செலவில் விஸ்தரிக் கப்படுமென்றும் பல கப்பல் களை செய்வதற்கு வசதி செய்யப்படுமென்றும் அறி யப்படுகிறது.

## வாஷிங்டனில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி: ளில் சிலவற்றை அங்கு வந் திருந்த அறிஞர்களில் பலர் விலை கொடுத்து வாங்கினர்.

இந்தக் கண்காட்சியைத் திறந்துவைத்த இலங்கைத் தூதுவர் திரு ஒலிவர் வீர சிங்க அங்கு வந் திருந்த அதிதிகளை வரவேற் றுப் பேசுகையில் இந்த மாதிரியான கலாச்சார பரி மாற்றங்கள் அமெரிக்காவுக் கும் இலங்கைக்குமிடையே நல்லெண்ணத்தை வளரச் செய்யுமெனத்தான் நம்புவ தாகத் தெரிவித்தார்.

மட்டுவில் நுணுவில் பகுதி களிலிருந்து சராசரி 150க்கு மேற்பட்ட நோயாளர்கள் வந்து சேருகிறார்களாம். இவர்கள் டாக்டரின் பரி சோதனைக்குட் படுத்தப் பட்டு தகுந்த சிகிச்சை அளிக்கப்பட்டபொழுதிலும் பலமணிநேரம் வீதியிலே நின்று வெய்யில் மழை போனறவற்றினாலும் தாக் கத்தினாலும் கஷ்டமடைந்து பல இன்னலுக்கிலக்காகிக் கஷ்டமுறுவதாய் மேற்படி வைத்தியசாலை டாக்டர் திரு. எஸ் நல்லையா பரிதா பமாகக் கூறினார்.

நமது வைத்தியசாலை தாண்டி 20 இடங்களுக்கு மேற்படச் சேவை செய்யும் இ. போ. ச. பஸ் வண்டி கள் பஸ்ஸுக்காக காத்தி ருக்கும் நோயாளரைப் புறக்கணிக்கக் கூடாதென் றும் ஆஸ்பத்திரிக்கு முன் னால் நிற்பவர்களுக்கு இ. போ. ச. விசேஷ சலுகை காட்டவேண்டுமென்றும் டாக்டர் தெரிவித்தார்,

## உல்லாச விடுதிக்கு ஆட்சேபம்

திருக்கோணமலை, செவ்

குடாக்கரை கிராம விஸ் தரிப்பு பகுதிக்கு உள்ளடங் கிய பகுதியினுள் உல்லாசப் பிரயாணிகளுக்கான தங்கு விடுதிகளும் மற்றும், விஸ் தரிப்புதிட்டங்களும் அமைக் கப்படுவதை மூதூர் முதல் வர் ஜனாப் எம். இ. எச். முகமது அலி ஆட்சே பித்து ராஜாங்க அமை ச்சருக்கு அவசர தந்தி மூலம் அறிவித்துள்ளார். பிரஸ் தாப தேவைகளுக்கு கடற் கரையை அடுத்துள்ள பகுதி களை உபயோகப்படுத்தும் படியும் அவர் அத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைநிமிர்ந்து வாழமுடியா திருக்கிறது. தமிழரசாரின் சத்தியாக்கிரகப் போராட் டத்தின்மூலம், இங்கு வந்த ராணுவத்தின் கெடுபிடியே இதற்குக்காரணம்" என தீவுப்பகுதி தமிழ்க்காங்கி ரஸ் வேட்பாளர் வழக்கறி ஞர் என். ரி. சிவஞானம் வேலணையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் பேசு கையில் குறிப்பிட்டார்.

நயினாதீவு கிராம சபைத் தலைவர் சி. க. தம்பையா, வேலணை முன்னாள் கிராம சபைத் தலைவர் திரு. மு. சுப்பிரமணியம், திரு. மகேந் திரராசா, திரு. சபாரத்தி னம் ஆகியோருட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றி னர்.

உரும்பராயில்

## தமிழர் சுயாட்சிக் கழக வாலிப முன்னணிக்கிளை

உரும்பராய், செவ்வாய்

உரும்பராயில் தமிழர் சுயாட்சிக்கழக வாலிப முன் னணிக்கிளை அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. திரு. மு. சி. கனகசுந்தரம் பேசுகையில் "தனித் தமிழ் நாடு கோருவது தான் ஒரே ஒரு மார்க்கம். அதைப் போராட்டத்தின் மூலம் தான் பெற்றுக்கொள்ளமுடி யும்" என்றார்.

கிளையின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய் யப்பட்டனர். தலைவர்: திரு எஸ். இந்திரராஜா. உபதலை வர்: திரு. ஏ. தவேந்திரம், செயலாளர்: திரு. பி. காசிநா தன், உபசெலாளர்: திரு. ரி. மகேஸ்வரன், பொருளாளர்: திரு. எஸ். ஸ்ரீறங்கநாதன் நிர் வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு விசேஷ காட்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதால் தொடர்ந்து காட்சியளிக்கும்

ஔவையார்

வின்ஸரில்

தினசரி 4 காட்சிகள்

ருக்கையில் சிவபெருமான் கிழப்பிராமணர் வடிவில் தோன்றி, தடுத்தாட் கொள்ள வருகிறார். கிழவ ராக நடித்தபெண்மணியின் நடிப்பு, பேச்சு, முகவெட்டு எல்லாம் முதல்நம்பர். தன் னைத் தடுத்தாட் கொள்ள இறைவனே கிழவராக வந் தாரென்பதை உணர்ந்து

## கோரிக்கை

திருக்கோணமலை, செவ்.

மூதூர் ஆஸ்பத்திரிக்கு பல் வைத்தியர் ஒருவரையும் மருத்துவமாது ஒருவரையும் நியமிக்கும்படிகேட்டு மேன் காமம் ஐ. தே. கிளை, ஈ. எல். சேனநாயகாவுக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

## பல்கலைக்கழக மாணவன் கைது

கோட்டை, செவ்.

வித்தியோதய பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் தமது பல்கலைக்கழக உப வேந்தரைக் கத்தியால் குத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ததாகக் கூறப்பட்ட தைத் தொடர்ந்து சந்தே கத்தின் பேரில் ஒரு மாண வனைக் கைது செய்துள்ள னர். மேலும் இது சம்பந்த மாகப் பொலிசார் இரு மாணவர்களைத் தேடுகின்ற னர்,

## ரஷ்யாவிலிருந்து திரும்புகிறார்

திருக்கோணமலை செவ்

திருக்கோணமலையைச் சேர்ந்த திரு எஸ். சரவண பவன் ஐந்து வருட வைத் தியப் பட்டப் படிப்பை, ரஷ்ய சர்வகலாசாயில் முடித்துக்கொண்டு இம்மா தம் தாயகம் திரும்புகிறார். இவர் டாக்டர் சித்திரவேலு வின் புதல்வராவார்.

கடலிற் சடலம்

## அடையாளம் காணப்பட்டது

ஊரைதீவு, செவ்

குறிகாட்டுவான் நெடுந்தீவு கடலில்கண்டெடுக்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. புங்குடு தீவு இரண்டாம் வட்டாரத் தைச் சேர்ந்த சண்முகம்வள் ளிப்பிள்ளை என்பவரே இவ் விதம் கடலில் மிதந்ததாக விசாரணையில்தெரியவந்துள் ளது.

நாற்பத்தைந்து வயது நிரம்பிய இவர் ஒரு மன நோயாளர்எனக் கூறப்படு கிறது.

பல்கலைக் கழகத்தில் படிப்பதற்குத் தெரிவு செய் யப்பட்ட ஒரு கிராமியப் பெண்ணின் குடும்பத்தை மையமாக வைத்து எழுதப் பட்டது இந்த "வாசிற்றி வனிதை" என்ற நாடகம். முழுநீள நகைச்சுவை நாடக மாக இருந்தாலும் ஒரு கிராமிய குடும்பத்தின் மனோபாவத்தைப் பிரதிபலி க்கும் யதார்த்தம் நிறைந்த தாக இந்த நடகம் அமைந் துள்ளது. சமூக நாடகம் என்றபெயரில் நடுத்தர குடும்பங்களின் நகர வாழ்க் கையை வைத்து எழுதப் பட்ட நாடகங்கள் மலிந்து வரும் இந்தக்காலத்தில் ஒரு கிராமியச் சூழலில் கிராமிய மக்களின் மனோபாவத்தைப் பிரதிபலிக்கும் இந்த நாட கம் ஒருபுதிய திருப்பம் என்று சொல்லலாம்.

பல்கலைக்கழகத்தில்புகுந்த கிராமியப் பெண்ணின், படி த்து முன்னேற விழையும் மனோபாவமும், என்னதான் படித்தாலும் தன் மகளை முதிசக்காரனை தன் தம யன் மகனுக்கு வேலையற்ற பைத்தியம் என்பதையும் பார்க்காமல் கலியாணம் செய்துவைக்கத் துடியாத் துடிக்கும் அந்த தாயின் மனோபாவமும் ஒன்றுக் கொன்று முரண்பட்டுப் போட்டியாய் அமைந்து நாடகத்திற்குச் சுவையை யும் பொலிவையும் தருகின் றன. இந்தத் தாய்—மகள் மனோபாவப் போராட்டத் தில் மகள் பக்கம் ஆதரவு காட்டி இரண்டுபேருக்குமி டையில் நெரிந்து சமாளிக் கத்திணறும் தந்தையின் நிலையும் மிக அவதானமா கச் சிருட்டிக்கப்பட்டுள்ளது இவர்கள் பிரச்னைகளுடன் தொடர்புபட்டஏனைய பாத் திரங்களும் சுவையுள்ளன வாக அமைந்துள்ளது பாரா ட்டப்படவேண்டியது.

வாசிற்றி வனிதை மணி யாக நடித்த செல்வி எஸ். வசந்தி தன் பாகத்தைச் சுமாராகச் செய்திருக்கிறார். அனுபவம் அவருக்குத் தன் நம்பிக்கை ஊட்டும் என்று நம்புகிறோம். மணியின் தாய் தங்கமுத்துவாக நடி த்த திரு. க. அசோகநாதன் தளம்பாமல் தன் குரலையே பெண்குரலாக மாற்றியது மல்லாமல் ஒரு கிராமியத் தாயை அப்படியே படம் பிடித்துக்காட்டினார். பேச்சு தொனி அங்க அசைவு முக பாவம் நடை உடை அத்த

னையிலும் அவர் பாத்திர மாகவே மிளிர்ந்தார். ஒப்ப னையம் அவரை அவ்வளவா கக்காட்டிக் கொடுக்கவில்லை. மணியின் தந்தை பொன் னையாவாக நடித்த திரு. பி. பி. காந்தன் பாத்திரத் தின் பொறுப்பை உணர் ந்து மிகத் திறமையாக பாத்திரத்தினின்றும் வில காமல் நடித்தார். இவர்கள் குடும்பநண்பர் தம்பிராசா வாக நடித்த திரு. கே. சகாதேவன் தத்ரூபமாகப் பாத்திரத்தைப் பிரதிபலித் தார். பைத்தியகார மரும கன் மனோகரனை நடித்த திரு ஆர் ஜெயச்சந்திரன் தன்பாகத்தை உணர்ந்து நடித்தார் போடிங் மாஸ் டர் சில்வாவாக நடி த்த திரு கே சி சிவா ஜியும் மணியின் காதலன் மூர்த்தியாக நடித்த திரு கே ஏ பகவத்சிங்கும் பர வாயில்லாது நடித்தார் கள். ஏனையோர் மேடையில் தேன்றிமறைந்தனர்.

நாடகத்தில் மனோகரனு க்கு பயித்தியம் பிடித்ததற் கும் பின்பு மாறியதற்கும் கற்பிக்கப்பட்ட காரணம் வரவேற்கத்தக் முற்போக் கானது. சில காட்சிகளை குறைத்தும் சிலகாட்சிகளைக் நீக்கியும் இரண்டு மணிநேர நடகமாககினால் நாடகம் மிக விறுவிறுப்பாக அமை யும் என்பதில் சந்தேக மில்லை, மொத்ததில் இந்தநாடகம் ஒருவெற்றி நாடகம் சிவசக்தி கலை அர ங்கம் கண்ணன் கோஷ்டியு டன் சேர்ந்து அண்மையில் இந்தநாடகத்தை யாழ் கந ரில் அரங்கேற்றினர்,

ஆ. தேவராசன்

## ஒளிமயமாகியுள்ளது

வேலணை, செவ்

வேலணை மண்கும்பான் பிள்ளையார் ஆலயம் இரவு நேரங்களில் இருண்டு கிட ந்த நிலைமாறி மின்சார தீப ங்கள் மூலம் ஒளிமயமாகி யுள்ளது.

## டி. டி. ரி. தெளிக்கப்படுகிறது

வேலணை, செவ்

நோயற்ற சுகதேகிகளாக மக்கள்வாழ வழி பிறந்துள் ளது. இப்பகுதியில் நுளம் புத் தொல்லை இருந்து வந்த தெனினும் இப்பொழுது சகல பகுதிகளிலும் சுகாதா ரப்பகுதியினர் டி. டி. ரி. மருந்து தெளித்து வருகின் றனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக் கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

யுறப்பட்டாலும் எந்தச்சம யத்தில் 'கள்ளத் தோணி' என்று கைதுசெய்யப்படு வார்களோ என்ற பயம் வேறு.

இந்த நிலையில் அவர்களை திருப்தியாயும் சந்தோஷமா யும் வைத்திருப்பதுதோட்ட முதலாளிகளின் கடமையா

இந்த கலகத்தின் விளைவாக யாழ்ப்பாணம் சுருட்டுவெளி யூர்களுக்குபோவது குறை ந்து பாவனையாளர்கள் பீடி, சிக்ரெட் முதலியவற்றில் விழுந்து விட்டால் நஷ்டம் யாருக்கு?

—வழிப்போக்கன்

## முல்லைத்தீவில் உள்ளூராட்சி வார கொண்டாட்டம்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவுப் பட்டின சபையில் நேற்று உள்ளூரா ட்சிவாரம் மிகவும் கோலா கலமாக ஆரம்பமாகியது அதிகாலையில் சகல கோவில் களிலும் விசேட பூசைகள் நடைபெற்றன

முல்லைத்தீவுப் பட்டினசபை முன்றலில்பாடசாலைமாணவ மாணவிகள் அணிவகுப்பு ஒருபுறம். மறுபுறம்பிரமுகர் களும் ஆசிரியர்கள் இவர் களிடையே முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவி கள் தேசியகீதம் பாட பட் டின சபைத்தலைவர் திரு ம சூ வஸ்தியாம்பிள்ளை தேசி யக்கொடியை ஏற்றி உள்ளூ ராட்சி வாரத்தை ஆரம் பித்துவைத்தார் பின்பு தலை வர் தலைமையில் சென்ற கோஷ்டியினர் சகல கோவில் களுக்கும் சென்று சிரமதா னம் மூலம் வீதிகளைத் துப் பரவு செய்தனர்.

## சத்தியேந்திரா நியமனம்

கோட்டை, செவ்.

தேசிய உயர்கல்விச் சபை குழுவில் இருந்து ராஜினு மாச் செய்த 3 அங்கத்தவர் களின் இடத்துக்கு சமீபத் தில் வழக்கறிஞர் என். சத்தி யேந்திரா உட்பட மூவரை அரசாங்கம் உயர் கல்விச் சபைஅங்கத்தவர்களாக நிய மித்துள்ளது. ற்ன்னாள் பகி ரங்க வேலைப்பகுதி அதிபர் திரு வீ. ஸி. டி. சில்வா கண் டியைச் சேர்ந்த டாக்டர் எஸ். இஸ்மாயில் ஆகியவர் கள் நியமனம் பெற்ற மற்ற இரு அங்கத்தவர்கள்.

## தீக்கிரை

சங்கானை, செவ்

சங்கானை கிழக்கைச் சேர் ந்த வேலன் கதிராசி என்ப வரின் வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலாகியது. இதற்குள் இருந்த பெறுமதிவாய்ந்த தளபாடங்கள் பொருட்கள் ஆகியவற்றுக்கு சேதம் ஏற் பட்டுள்ளது. அயலவர்கள் தீயணைக்கும் முயற்சியில் ஈடுபட்டும் பலன்கிட்ட வில்லை: இது சம்பந்தமாக சந்தேக நபரான பொ, செல்லன்என்பவரை பொலி சார் தேடுகின்றனர்.

## 'இராமநாதன் பல்கலைக் கழகமே வேண்டும்'

### கத்தோலிக்க வாலிபர் மகஜர்

பருத்தித்துறை, செவ்.

'தேசிய வீரராக மதிக்கப் கப்படும் உயர்திரு இராம நாதப் பெரியாரின் பெயரில் ஒரு பல்கலைக்கழகம் யாழ்ப் பாணத்தில் நிறுவப்பட வேண்டியது அவசியமும் பொருத்தமுமாகும். சேர் பொன்னம்பலம் இராம நாதன் ஒரு சாகியத்தி னருக்கோ, மதத்தவருக்கோ உரியவரல்லர். பரந்த நோக்கும், விரிந்த மனப் பான்மையுமுடைய அப் பெருமகனைத் தமிழர் மட்டு மன்றிச் சிங்களவரே வர லாற்றில் இடம்பெற்ற தலை வராக ஏற்றுக்கொண்டுள்ள மையால் அவர் நாடாளு மன்றத்தில் பிரதிநிதித்து வம் வகித்த யாழ்ப்பாணத் திலேயே அவரது பெயரால் ஒரு பல்கலைக்கழகம் நிறு வப்படுவது சர்ச்சைக்குரிய விடயமாகக் கருதப்படமுடி யாது.'

இவ்வாறு கரவெட்டி கத் தோலிக்க வாலிபர் முன்ன ணித் தலைவர் திரு. ஆர். ஆனந்தராசா, உயர் கல் விச் சபைக்கு அனுப்பிவைத் துள்ள மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இம்மக ஜரின் நகல் பிரதியொன்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கும் அனுப்பப்பட்டுள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org